குறள் நெறி

தமிழ் வாழ்க

கட்சிச்சார்பற்ற அரசியல் இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு

ஆசிரியர் : பேராசிரியர் சி. இலக்குவனார் எம்.ஏ., எம்.ஓ.எல்.

ஆண்டுக் கட்டணம் ரூ. 5. திங்களிருமுறை வெளிவருவது

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 வைகாசித்திங்கள் 2ஆம் நாள் (15-5-1964) | இதழ் : 19

திருக்குறள் உலகம் உவந்தேற்கும் வாழ்க்கை நூல்

23—3—1964 மாலையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் திருவள்ளுவர் திருஉருவப்படத் திறப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் வரவேற்புரை:

தமிழ்நாடு சட்டமன்றச் சரித்திரத்தில் ஒரு புனிதமான நாள். தெய்வமாப்புலவர் திருவள்ளுவர் திருஉருவப்படத்தை இந்த மன்றத்திலே இன்று நாம் திறந்து வைக்கிறோம். திங்கள் போலும் செங்கதிர்போலும்என்றும்ஒளிவீசிநிற்கும் நீதிநூல் நமதுதிருக்குறள். அதை அளித்த திருவள்ளுவர் தமிழகப்பெருமக்களுக்குமட்டும் உரியவரல்லர். தனி ஒரு மதத்தினருக்குமட்டும் உரியவரல்லர். எல்லா இனத்தாருக்கும் எல்லா மதத்தாருக்கும் உரியவர். எல்லாக் காலத்துக்கும் எல்லா நாடுகளுக்குமே அவருடையவாக்குகள் பொருந்தும்.

பல்வேறு தரப்பு மக்களும் சேர்ந்து இணைந்து அன்போடு வாழும் பண்பு நமது நாட்டில் நல்லமுறையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அந்தப் பண்பாட்டின் சின்னம்போல் விளங்கும் நம்முடைய உபசனாதிபதி டாக்டர் சாகீர் உசேன் அவர்கள் இன்று நம்மிடையே இருப்பது நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி தருவதாகும். திருவள்ளுவர் திருவுருவப்படத்தை இந்த மன்றத்தில் அறிஞர் பெருமகன் சாகீர் உசேன் அவர்கள் திறந்துவைப்பது மிகப் பொருத்தமானதும் நமக்கெல்லாம் பெருமை தருவதும் ஆகும்.

திருக்குறள் சென்றஇரண்டாயிரம் ஆண்டுகளாக மக்களிடையே



உயர்ந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கிவருகிறது. பின்னாலே வந்த பல நீதிநெறிகளுக்கு, வாழ்க்கை இலக்கணங்களுக்கு அதுவே சீவ ஊற்று. குறள்நெறிகளே பல்வேறு இலக்கியங்களிலும் படர்ந்து பரவின. திருக்குறள் சில தத்துவங்களை மாத்திரம் சொல்வதோடு நிற்கவில்லை. பக்தி, இறைவழிபாடு பற்றிமட்டுமே அது சொல்லவில்லை. மக்கள் தங்கள் வாழ்க்கை முன்னேற்றத்துக்காகத் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை அது முக்கியமாகச் சொல்லுகிறது. மக்கள் நிறைவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிக்கொண்டு செல்லுகின்றது. மக்கள் முன் ஓர் அரிய லட்சியத்தைக் காண்பித்து அதை அடையும் நெறியைத் தெளிவாக்குகிறது. மக்களுக்கு உயர்ந்ததோர் ஆண்மையைப் போதிக்கிறது குறள். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று கூறிப் பயமின்மையைப் புகட்டுகின்றது. ஆண்மையோடு எதிர்த்து நில்; இடும்பைகள் மறையும் என்று அழுத்தமாக எடுத்துரைக்கின்றது.

திருவள்ளுவர் அறத்துக்கே முதலிடம் கொடுக்கிறார். அறத்தை முதன்மைப்படுத்திவைப்பது நம் தமிழ்நாட்டுக்கு உரிய தனிப் பெருமை ஆகும். அறத்துக்குச் சார்பாக நிற்கும் ஒழுக்கம்பற்றிக் குறிப்பிடும்போது "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று கூறுகின்றார். அறத்தைக் காட்டிலும் வேறு வலிமையும் இல்லை, அதை மறப்பதைக் காட்டிலும் வேறு கேடும் இல்லை என்று கூறுவதன்

(அடுத்த பக்கம் பார்க்க)

— உள்ளே —

தலையங்கம்:

இதுதான் மக்களாட்சியா?

கருத்தரங்கம்:

இந்தியால் தமிழுக்குக் கேடு...?

பெரும்பாலோர் மொழி இந்தி என்பது உண்மைக்கு மாறுபட்டது

தொல்காப்பிய விளக்கம்

வள்ளுவரும் அரசியலும்

வள்ளுவர் குலஇனம்

அலுவலகங்களில் ஆட்சித்தமிழ்

செய்திகள்

மற்றும் பல

25 காசு

சொல்லுக சொல்லில் பயனுடைய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் மாபெருங்காப்பியங்களின் நீதியைச் சாரமாக வடித்துக்காட்டுகிறார். வறுமையால் வாடும் மனிதனை நோக்கிக்கூட அவர் "அறம் பிறழாதே" என்று கூறும் இடம் உருக்கமும் அழுத்தமும் நிறைந்ததாகும். "ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்கசான்றோர் பழிக்கும் வினை" என்கிறார்.

சமுதாயத்திலுள்ள கோணல்களை அகற்றி அமைதியும் இன்பமும் நிரம்பிய சமுதாயத்தைக் காண்பதற்கு விரும்பினார் வள்ளுவர். இதற்காக அறத்தை வலியுறுத்திய அவர் பொருள் இல்லையேல் வாழ்க்கைசிறக்காது என்பதற்காகப் பொருள் தேடும் வகை குறித்து அடுத்தபடியாகச் சொல்லுகிறார். அதன்பின்பு இன்பம் பற்றிக் கூறுகின்றார். அறம், பொருள், இன்பம் இந்த மூன்றும் அமையப்பெற்றால், வீடு என்பது தானாக அமையும். எனவே மோட்சம் பற்றி எதுவும் கூறாது விடுத்தார். எந்த வகையிலிருந்து பார்த்தாலும் திருக்குறள் ஒரு முழுமையான வாழ்க்கை நூல். தினசரி வாழ்க்கையில் நாம் பின்பற்றவேண்டிய நியதிகள் குறித்து நமக்குச் சந்தேகம் ஏற்படும்போது தெளிவு உண்டாக்கி வழி காட்ட அறம் கூறும் நன்னூலாகக் குறள் விளங்குகிறது. எந்த நிலையிலும் நமக்கு ஒளி கொடுத்து ஊக்கமூட்டி, நம்வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதற்கு வேண்டுமளவு ஆற்றலை அளிப்பது திருக்குறள் ஆகும்.

சமூகத்தின்பால் மனிதனின் கடமை என்ன? மனிதன் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார் வள்ளுவர். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்கிறார். நம்மிடம் இருக்கும் பொருள்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் அல்லர். அப்பொருள் பிறருக்கு உதவும்படி பயன்படுத்தத் தர்மகர்த்தாக்களாக நாம் இருக்கவேண்டும் என்று காந்தியடிகள் உபதேசித்ததை அறிவோம். அதையே வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரைத்திருக்கிறார். "தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு" என்றுகுறிப்பிடுகிறார். தீமையை எதிர்த்துப் போராடும் மனிதனுக்குத் திருக்குறள் போலப் பக்கத் துணை வேறு ஒன்றுமே இல்லை.

தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் சொல்லியிருப்பது போலவே, நாட்டின் அரசுக்கும் வள்ளுவர் நெறிமுறைகளைக் குறிப்பிட்டிருக்கிறார். அரசநீதியை அவர் எழுபது அத்தியாயங்களில் வகுத்துத் தந்திருக்கிறார், அவருக்கு முன்னால் அரசநீதிபற்றிக் கூறிய ஆசிரியர்கள் பலர். அறநெறியின் வழி நின்று அரசுநெறி அமைதல்வேண்டும் என்றவர் வள்ளுவப் பெருந்தகையே ஆவார். "அரசின் கீழ் வாழும் மக்கள் அனைவரும் நல்லொழுக்க நெறியில் வாழும்படி செய்தல் அரசின் கடமை." அஃதாவது நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடன் என்று சொல்லுகிறார்.

தனிப்பட்ட மக்களுக்குக் கொல்லாமை, புறங்கூறாமை, இன்னா செய்யாமை ஆகிய சிலங்களைக் கூறும் வள்ளுவர் அரசாங்கத்துக்கு உரிய தர்மத்தைக் கூறும்போது அரசு வலிமைபெற்றதாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். பொல்லாதவர்களை ஒடுக்குவது 'நல்ல பயிரிடையேயிருந்து களை எடுப்பதுபோன்ற கடமை' என்று உணர்த்துகிறார். தனி மனித தர்மத்துக்கும் அரச தர்மத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை வியக்தமாகப் புலப்படுத்துகிறார்.

சாதிமத பேதமற்ற சமுதாய அமைப்பே லட்சியம் என்று குறிப்பிடுவதற்காக, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அன்றே சொன்னார். பிறப்பில் உயர்வு தாழ்வுகருதும்பேதைமை அழிந்து, சாதி வேறுபாடற்ற சமுதாயம் அமையும் காலச் சூழ்நிலையை இன்று பார்க்கிறோம். செல்வம் சரிசமமாக வினியோகமாக வேண்டும் என்ற கருத்தில் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' வாழ்வை வலியுறுத்தினார். அந்தப்பாதையில் நின்று, இன்று பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து சோசலிச சமுதாயம் அமைப்பதை நம்முடைய குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம்.

திருவள்ளுவர் நல்வாழ்க்கையின் இலக்கணங்கள் சொன்னார். நீதிகள் சொன்னார். ஆனால் அவைகளை இலக்கண சூத்திரமாக அல்லாமல் கவிச் சுவையோடு கூறினார்.

அவருடைய சொற்கள், கருத்துக்கள் ஒவ்வொன்றும் உயர்ந்த லட்சியத்தை நோக்கி நம்மை ஈர்க்கின்றன. பெரிய லட்சியங்களை அடைவதற்குக் காரிய சாத்தியமான, பின்பற்றத் தகுந்தவழிமுறைகளைச் சொல்லுவது அவருடைய தனிச்சிறப்புஆகும். குறள் பாரம்பரியம் நமக்கு வாய்த்த தனிச்சிறப்பு ஆகும். அதுவே நம்மை வழி நடத்திச்செல்லுகின்றது. குறள்கூறும் இலக்கணங்களுக்கு இலக்கியமாகக் காந்தியடிகள் வாழ்க்கை விளங்குகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம்; துவேசம், பகைமை,பொல்லாங்கு ஆகியவைகளை அடியோடு ஒழிக்க அது வழி காட்டுகிறது. ஆகவேதான் குறள் இன்றும் வாழ்கிறது; என்றும் வாழப்போகிறது.

திருக்குறள் உலகம் ஓம்பிய நீதி நூல். சுமார் 33க்கு மேற்பட்ட மொழிகளில் குறள்மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அறிஞர்போப்பையர் நமதுநாட்டுக்கு வந்து தமிழையும் திருக்குறளையும் கற்றபின்பு, குறளின் சிறப்பை உணர்ந்து குறள் நெறியை உலகெலாம் பரப்பும் பணியை மேற்கொண்டார். குறள் போப்பையரால் மொழிபெயர்க்கப்பட்டது. நமது நாட்டின் சிறப்பை, உயர்ந்த பண்பாட்டை, அறநெறியைப் பிற உலகம் அறிய இதனினும் சிறந்த நூல் வேறு இல்லை. பெரிய லட்சியங்களைக் குறிப்பிட்டு, அதை அடைய வழியும் காட்டிச் செல்லுகின்றது குறள். குறள் நெறியை நினைவுகொள்ள, நமது நாட்டிற்கே உரிய அறநெறியில் மேலும் மேலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள நாம் முனைவது அறவழியிலும் நமது முன்னேற்ற முயற்சியைக் குறிப்பிடுவதாகும். திருவள்ளுவர் திருஉருவப்படம் முதன்மையாக அமைவதற்கு இம் மன்றத்தைக் காட்டிலும் சிறப்பான இடம் வேறு இருக்க முடியாது. இம் மன்றத்தில் நம்முடைய பணிகளுக்கு ஊக்கமூட்டவும் வழிகாட்டிச்செல்லவும் உதவக்கூடிய சின்னமாய் அவரது திரு உருவப்படம் விளங்கும். "சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்" என்பன போன்ற மணிவாசகங்கள் என்றும் நினைவிலிருக்கத்தக்கவையாகும்.

"பெரும்பாலோர் மொழி இந்தி"
என்பது உண்மைக்கு மாறுபட்டது.

(மே. சி. சிதம்பரனார்)

"பாதிக்குமேலானவர்கள் பேசுவதால் இந்தியைத் தேசிய மொழியாக்குவதில் நியாயமிருக்கிறது"

"மொரார்சி" 28-3-64-காஞ்சிபுரம்.

இந்தி, தனிமொழியா? பழமை மொழியா? சொல் வளம், பொருள் வளமுண்டா? எழுத்து வனப்புண்டா? இலக்கியவிலக்கணங்களுண்டா? அறிவியல் நூல்களுண்டா? இந்தி படித்து ஒரு விஞ்ஞானியாகலாமா? ஒரு மருத்துவனாகலாமா? ஒரு பொறியியலனாகலாமா? ஒரு வழக்கறிஞனாகத்தானாகமுடியுமா? அல்லது இந்தியைக் கொண்டு பிறநாட்டாரோடு கலந்துபேசவியலுமா? என்ற கேள்விகட்கெல்லாம் விடைகள் இல்லையென்பது ஒப்பமுடிந்ததாய்விட்டது. இறுதிக்காரணம்? பெரும்பான்மையினர் பேசப்படுவதென்பதைத் திட்டமிட்டுத் "திடீர்ப்புளுகு"கள் மூலம் உயர்த்திக்கொண்டே வருகிறார்கள்.

பொய்மையெனத் தயங்காது அதனையே மென்மேலும் உறுதியுடன் பேசிவந்தால் இறுதியில் அது மெய்மையாகவே நிலைத்துவிடும்" இது இட்லர்க்குக் கிடைத்த "கெபள்சு" என்ற அமைச்சரின்முடிவு.

"யாதொரு பொருளை எப்பேர்க்குற்றவரிடமிருந்து கேட்பினுஞ்சரி, அதனை அப்படியே நம்பாது அதனுண்மையாதென ஆராய்ந்துகோடலே அறிவின் இலக்கணம்" என்பது குறள்நெறியின் முடிவு. இம்முடிவுப்படி இந்தியின் பெரும்பான்மைக் கணக்கு உண்மைதானா என்பது காணலாம்.

"இந்தி பேசுவோர் தொகை 100க்கு 42 விழுக்காடென்றே பல ஆண்டுகளாகவும் இன்றும் இந்தி ஆதரவாளர்களும் அமைச்சர்களும் புள்ளி விபரம் போட்டுப் பேசிவரும்போது "பாதிக்குமேலானவர்கள் பேசுவதால்" எனக் குறிப்பிட்ட மொரார்சியின் பேச்சு திடீர்ப் புளுகுகளில் ஒன்றென்பது வெளிப்படை.

இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்ப்பவர்கூட 100க்கு 42 என்ற கணக்கை ஒத்துக்கொண்டு 42 பேர் பேசுகிற மொழியை 58பேர் மீது திணிப்பதுஎன்ன நியாயம்? எனவாதாடுகின்றனரன்றி, கணக்கு உண்மையா? எனக் காண்பதில்லை. இதனாற்றான் கெபள்சின் முடிவும் உறுதிப்பட நேர்கிறது.

"பெரும்பாலோரால் பேசப்படும் மொழி இந்தி என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. கணக்கு எடுத்துப் பார்க்கும்போது இந்தி மொழியைப்பேசுகிறவர்கள் நம் நாட்டில் 13கோடி பேர்கள். பாக்கி இருக்கும் 23 கோடி மக்களும் வேறு மொழிகளைத் தாய்மொழியாகக்கொண்டவர்கள்".

— திரு. சி. சுப்பிரமணியம்,
ஆனந்தவிகடன் தீபாவளி மலர் 1955.

அக்கணக்கின்படி பார்க்கும்போது 100க்கு 42விழுக்காடு என்பதும் உண்மையல்ல. இனிப் பதின்மூன்று கோடி மக்கள் பேசுவதென்பதும் உண்மையா? என்பது காணலாம். வடநாட்டில் இந்தியல்லாத முக்கியமான மாநில மொழிகளின் கணக்குகள் பின்வருமாறு.

உருது	220	இலட்சம்
மராத்தி	270	,,
வங்காளி	250	,,
குசராத்தி	160	,,
ஒரியா	130	,,
பஞ்சாபி	120	,,
ராசசுதான்	107	,,
அசாமி	50	,,
காசுமீரி	20	,,
	1327	

இந்தியசென்சசு (1951) கணக்குப்படி இந்தியாவில் பேசப்படுகின்றமொழிகள் மொத்தம் — 782

1) இவற்றில் ஒரு கோடி மக்கட்குமேல்பேசப்படும் மொழிகள் — 12
2) ஒருஇலட்சத்திலிருந்து ஒரு கோடி மக்கள்வரை பேசும் மொழிகள் — 48
3) ஒரு இலட்சத்துக்குக் குறைவாகபேசுபவர்களை கொண்டமொழிகள்-722

திரு. சி.சு. அவர்களின் கணக்குப்படி "மொத்தம்2530 இலட்சம் மக்கள் (வட இந்தியாவில்) ஆரியமொழி பேசுபவர்கள்" என்றால், முக்கியமான மாநிலமொழிகள் பேசுவோரே 1327 இலட்சமெனறால். 13 கோடி பேர் இந்தி பேசுவோர் என்ற அவர் கணக்கும் உண்மையன்று. மேலும் 782 மொழிகளில் தென்னாட்டிற்குரிய மொழிகள் 17 தான். மீந்த 765 மொழிகட்கு வடநாட்டில் வரும் ஈவுதானெங்கே?

1951ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை (சென்சசு) கணக்குகளை கையில்வைத்துக்கொண்டு தாய்மொழியாகப் பேசப்படும் ஒவ்வொரு இனக்கணக்கையும் தெளிவாகச் சொல்லிவிடலாம்.

தமிழ் பேசுவோர் தொகை	2,65,46,764
கன்னடம் பேசுவோர் தொகை	1,44,71,764
மலையாளம் பேசுவோர் தொகை	1,33,80,109
தெலுங்கு பேசுவோர் தொகை	3,29,99,916

இன்னும் எழுத்தே இல்லாத மொழிகட்குக் கூடத் தனித்தனிக் கணக்குகள் உண்டு. தோடர்மொழி - நீலகிரிப் பகுதியில் 879பேர் என்று குறிப்பிடுகிறது. குறவர் மொழி-45 817. இவ்வாறுதுளு, கொங்கணி சௌராட்டிரா, படகா, கோண்டு. முதலிய தென்னாட்டுப்பதினேழு மொழிகட்கும் கணக்குகளுண்டு.

இவ்வாறு காட்டுவாசிகள், நாடோடிகள், மலைவாசிகள் முதலியோருக்கும் தனிப்பட்ட கணக்குகள், பேசுபவர்களின் எண்ணிக்கைகள் இருக்கின்றன! ஆனால், இந்தியாவின் ஆளும் மொழியாகத் தயார்ப்படுத்தும் இந்திக்கு அத்தகு கணக்கு கிடையாது!

"இந்தியாவில் இந்தி பேசுபவர்கள் தொகை எவ்வளவு என்பது யாருக்கும் தெரியாத ஒன்று. இந்தி ஆதரவாளர்கட்கும் தெரியாது, இந்திய அரசாங்கத்துக்கும் தெரியாது. கணக்கு (சென்சசு) எடுத்த அலுவலர்கட்கும் தெரியாது. இந்நிலையிற்றான், "15கோடி, 13 கோடி, 100க்கு 42 விழுக்காடு என்றெல்லாம் 'அரங்கின்றி வட்டாடி' வருகிறார்கள். இச்சோகச்செய்தியை சென்சசு அதிகாரிகளே ஒப்புக்கொண்டுள்ளனர், ஆக இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை யாருக்கும் தெரியாது."

— 1951 'சென்சசு' அறிக்கை மொழிகள்
பக்கம் 2

இக்குழப்ப நிலைக்குக் காரணம் என்ன? 1951 கணக்குகள் எடுக்கப்பட்ட நேரத்தில் வட இந்தியாவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி

தாய்மொழிபற்றிய பிரச்சனைகள் எழுந்தன; இந்தி ஆதரவாளர்கள் இந்தியையே தாய்மொழியாகக் கூறும்படி ஏனைய மொழியினரிடம் பிரச்சாரம் செய்தனர். இதற்கு ஆதரவும் கிடைத்தது எதிர்ப்பும் உருவாகியது அப்பொழுது பஞ்சாப் பெப்சு திலலி, இமயமலைப்பகுதி, பீகார் ஆகிய மாநிலங்களிலிருந்தும், மற்றும் பல பகுதிகளிலிருந்தும் மொழிக்குழப்பங்களேற்பட்டுத் தவறானபடி கணக்குகள் பொதுமக்களாலும் தரப்பட்டன. அதனால் கடைசியில் உண்மையில் இந்தி பேசுபவர்கள் எவ்வளவு என்பது தெரியாமல் போய்விட்டது.

ஆட்சிமொழியாகும் இந்திக்கு ஆள்பிடிக்கும் அலங்கோலம்

பஞ்சாப் மாநிலத்தில் 1951இல் கணக்கு (சென்சசு) எடுக்கும்பொழுது "எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொடுப்பது" எனப் பெருங் குழப்பங்கள் ஏற்பட்டன. சீக்கியர்கள் "குர்முகி" எழுத்தைக்கொண்ட பஞ்சாப்பிய மொழியைப் பேசுகிறார்கள். ஏனையோர் பெரும்பாலும் உருது பேசுகிறார்கள். இந்நிலையில், 'இந்திமொழி காப்பாற்றப்படவேண்டும்' "இந்தி ஆட்சி மொழியாக வருகிறது" "எல்லா மக்களும் இந்தியையே தாய்மொழியென்றுகணக்குக் கொடுக்கவேண்டும்" எனக் கொட்டையெழுத்துக்களில் வெளியிட்ட துண்டு அறிக்கைகள், பொதுக்கூட்டங்கள், பிரச்சாரங்கள் மும்முரமாய் இந்துக்களால் நடத்தப்பட்டன. ஆனால் அறிக்கைகள் உருது மொழிகளில்தாம் வெளியிடப்பட்டன ஏன்? இந்தி மொழி அங்கு யாருக்கும் தெரியாது. எனினும் சீக்கியர்களின் எதிர்ப்பு வலுத்ததால் கலகம் மூண்டது. இதன் பயனாய் "சாகாத்திரி" என்ற இடத்தில் நடந்த அடிதடியில் ஒருவர் கொலை, மூவர் படுகாயம், ஒன்பதுபேர் கைதாகினர் என்று செய்தித் தாள்களில் வெளிவந்தது யாவரும் அறிந்த ஒன்று. எனினும் பஞ்சாபி, உருது ஆகிய மொழிகளைக்கூட இந்தியுடன்சேர்த்துக்கணக்கு எடுத்துவிட்டார்கள்.

"இராசசுதானை எடுத்துக்கொண்டால் (1951சென்சசு) கணக்கு எடுத்தபொழுது மூன்று முக்கிய மொழிப் பிரிவுகள் அங்கு இருந்தன. 1) இராசசுதானி 2) மேற்கிந்தி 3) பிலி இவற்றுள் 'இராசசுதானி' "செய்புரி", "மார்வாரி", "மேவாரி" இன்னும் சில மொழிகள் இருந்தன

மேற்கு இந்தி பிரிவில், இந்தி, உருது, பிரசுபாவா பந்தல், கந்தி, தாங்கி ஆகிய மொழிகள் சேர்ந்திருந்தன.

பிலி மொழி நாடோடிக் கூட்டத்தினராலும், பழங்குடி மக்களாலும் பேசப்பட்டுவந்தன.

'இராசசுதானி' மொழி பேசுபவர் 1கோடியே 7 இலட்சம்பேர்கள், ஏனைய மொழிகள் இந்திஎன்ற தலைப்புக்குள், தள்ளப்பட்டுவிடுகின்றன.

இனி மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், பீகார் ஆகிய மூன்று மாநிலங்களையும் முழுக்க முழுக்க இந்தி மாநிலங்களாகவே காட்டிவிட்டனர். இவற்றையும ஒவ்வொன்றாக ஆய்வாம்

இந்திப்போர்வையில் 81 மொழிகள்

மத்தியப்பிரதேசத்தில், "இந்திபேசுபவர்கள்" என்று கீழ்க்கண்ட 81மொழிகளைப்பேசுகிறமக்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சென்சசு அறிக்கை கூறுகிறது.

1 இந்தி
2 உருது
3 இந்துசுதானி
4 பீகாரி
5 மைதிலி
6 இராசசுதானி
7 பிரசுபாசா
8 பக்ரி
9 மேவாரி
10 செய்புரி
11 மால்வி
12 சாட்டிசுகாரி
13 மார்வாரி
14 ஆசுமீரி
15 பந்தேலி
16 பலாகி
17 லோடி
18 கிராரி
19 ரகோபான்சி
20 தம்தி
21 சடி
22 பர்தேசி
23 கலாரி
24 பாடு
25 பங்கி
26 கோசாவி
27 ஓகி
28 சுவதி
29 நுனியா
30 பைகனி
31 பாண்டோ
32 அதுகுரி
33 பசுதாரி
34 மிர்கனி
35 மகேசுரி
36 போயாரி
37 குர்சார்
38 ராசுகாடி
39 நிமாதி
40 கால்பி
41 மராரி
42 போவாரி
43 சடாரி
44 பான்சாரி
45 ராசபுதானி
46 கோர்க்காலி
47 மாதுரி
48 குருமாலி
49 மீர்சாபுரி
50 கோசங்கா-பாடி
51 அபு
52 பர்பி
53 முசல்மானி
54 லோதாந்தி
55 போபாலி
56 கோட்வாரி
57 பூலியா
58 சங்கலி
59 ரங்கடி
60 அகரி
61 புவானி
62 வாணி
63 கந்தால்
64 ரிவை
65 பரத்பூரி
66 கோத்யாணி
67 பிரதாப்காடி
68 கங்கேரி
69 கங்காபாடி
70 ஆக்ராவாலி
71 மேர்வாரி
72 தேவநாகரி
73 உத்தாரி
74 பாமி
75 உத்கேதி-போலீ
76 பூலி
77 கோரக்பூரி
78 சார்மாவி
79 பான்சாரி
80 கோர்த்தி
81 போசுபுரி

(1951-சென்சசு அறிக்கை "மொழிகள்" பக்கம் 72)

ஒன்று இரண்டல்ல 81மொழிகளைச்சேர்த்து 'இந்தி' என்ற பெயருக்கு அதிகமான ஆள் சேர்த்துக்கொண்டார்கள்.

இந்த 81 மொழிகளும் சிறு சிறு மொழிகள் என்று எண்ணிவிடமுடியாது. இலட்சக்கணக்கில் மக்கள் பேசக்கூடிய மொழிகள் பலவுண்டு மார்வாரி என்ற மொழிஇராசசுதானில் பேசப்படுவது. அது இங்கு 45 இலட்சங்களுக்குமேல் பேசப்படும் மொழியாக உள்ளது. இது இந்திப் போர்வைக்குள் மறைகிறது இதேபோன்று மேவாரி 20 இலட்சம். செய்புரி 14 இலட்சம். பக்ரி 9 இலட்சம். சட்டிசுகாரி 9இலட்சம். மால்வி 3 இலட்சம். கால்பி 8 இலட்சம். இங்ஙனம் பெரியதும் சிறியதுமாக யாவற்றுக்கும் மதமாற்றம் செய்வதுபோல் மொழிமாற்றமல்ல மொழி மாறாட்டம் செய்துவிட்டனர். மொழிமாற்றம் என்றால் மொழி சொல்லிக்கொடுத்தல்ல. அவர்கட்கு இன்றும் இந்தி தெரியாது பெயரளவில் மாறுதலைச் செய்யும் வேலை வட இந்தியாவில் நடைபெற்றிருக்கிறது.

புள்ளிவிபரங்களுக்குச் சான்றுகள்:

மத்திய பாரத்

மொழி	1941	1951
இந்தி	14,40,906	58,42,114
மால்வி	16 78,087	5 23,374
நிமாரி	2,78,138	180,696

போபால்

மொழி	1931	1941	1951
இந்தி	6.464	67.988	6,52,722
உருது	6,97,065	6,99;523	1.31,60)

இங்ஙனம் வியக்கத்தக்க மாறுதல்கள் பற்றி, "சென்சசு" அலுவலர் குறிப்பிடும்பொழுது "சென்சசு புள்ளி விவரங்களின் மொழிப் பகுதியைப் பார்த்தால் திடீரென அதிகமான பேர்கள் இந்தியைத் தங்கள் தாய்மொழியாகக் கொடுத்திருப்பது தெரியவரும் ..இதற்குக்காரணம்என்னவென்றால் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுதான் ஆகும். தங்கள் தாய்மொழி இந்துசுதானி என்றோ இராசுதானி நிமா, மால்வி என்றோ வற்புறுத்தி யாரும் முன்வரவில்லை"

(1951) "சென்சசு" அறிக்கை பக்கம் 74.

(5ம் பக்கம் பார்க்க)

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாய்மொழி என்பது மாற்றமுடியாத ஒன்று. இந்தி ஆதரவாளர்களால் தாய்மொழியைக்கூட மாற்றிவிட முடிகிறது. ஏனைய மொழிகளைத் தாய்மொழியாகவும், இந்தி மொழியோ எழுத்தோ தெரியாதவர்கட்கும்கூட இந்தியைப் பெயரளவில தாய்மொழியாக்கி விட்டார்கள்

"(பீகார் மாநிலத்தில்) 3 கோடியே 19 இலட்சம் பேர்கள் இந்தியைத் தாய் மொழியாகப் பேசுபவர்களாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளார்கள்; உண்மையில் பீகாரில் உள்ள மக்களில வெகு சிலரே இந்தி மொழியைப் பேசுபவர்களாக இருப்பார்கள்."

1951-சென்சசு-மொழிகள்-பக்கம் 37.

பீகார் இந்தி மாநிலம் அல்ல!

இனிப் பீகார் மாநிலத்தை எடுத்துக்கொள்ளலாம். ஏனைய மாநிலங்கட்கெல்லாம், மாநில மொழிகள். அம்மாநிலங்களின் பெயரால் இருப்பதுபோல் பீகார் மாநிலத்துக்கும் "பீகாரி" என இருந்தது. ஆனால் இன்று மறைகிறது. அல்ல, மறைக்கப்படுகிறது.

பீகார் மாநிலத்தில் பேசப்படும் பெரும்பான்மை மொழி பீகாரி என்ற மொழியமைப்பேயாகும் அம்மொழி மூன்று பிரிவுகளாக இருக்கிறது. 1. மகதி, 2. மைதிலி. 3. போசுபுரி. இம்மூன்று மொழிகளும் - சிறு சிறு வேறுபாடுகளைத் தவிர, இலக்கணத்தாலும், சொற்களாலும் நெருங்கிய தொடர்புடையன. இவற்றை 'மகதபிராகிருதம்'', என்று மொழியாளர்கள் கூறுவார்கள் பிராகிருதம் என்றால் சிதைவு என்று பொருள் மகதம் என்பது பீகார் பகுதிக்குப் பழையகாலத்திலிருந்த பெயர். இதிற்றான் பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட நந்தபரம்பரையினரும், மௌரிய அரசர்களும் ஆண்டனர் மௌரிய ஆட்சியில் 'சந்திரகுப்தர்', பிப்பிசாரர். அசோகர் ஆகியோரின் பொற்காலத்தில் மகதநாடும், மகத மொழியும் உயர்நிலையிலிருந்தன. புத்தமதக் கோட்பாடுகள் எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்தது மகத மொழியேயாகும். இதோடு மைதிலி, போசுபுரி. ஆக மூன்றுமொழிகள் இன்னுமிருக்கின்றன இம் மொழியமைப்பில். பீகாரில் வழக்காற்றிலுள்ள மொழிகட்கும் இந்திக்கும் தொடர்பு கிடையாது.

மகதி, மைதிலி, போச்புரி; ஆகிய மூன்று பீகார் மொழிகளுடன், பெங்காலி அசாமி ஒரியா என்ற மூன்றையும் சேர்த்து ஆறு மொழிகளையும் ஒரு தனிக் குழுவாக மகதபிராகிருதக் குழுவாக எண்ணப்படுகின்றன எந்த அளவுக்கு ஒருமைப்பாடு இருக்கிறதென்றால், "திராவிடக்குழு மொழிகள் தனி அமைப்பாக இருக்கின்றனவல்லவா அதுபோன்று இந்த ஆறு மொழிகட்கும் ஒரே இலக்கணம் அமைக்கலாம்'' என்கிறார் மொழி ஆராய்ச்சியாளர் டாக்டர் கிரையசன்

1961 சென்சசு கணக்குகளை எடுத்து வெளியிட்ட அதிகாரியே "பீகாரி மொழிகளிடமிருந்து அடிப்படை அமைப்புகளிலேயே இந்தி அதிகமான அளவு வேறுபட்டிருக்கிறது'' என்று தவிர்க்கமுடியாதபடி உண்மையைத் தருகிறார்.

பீகாரில் இந்தி நுழைந்த கதை வேடிக்கையானது. இரண்டு மூன்று சென்சசுக்கு முன்பு இந்தி மொழியினர் தங்களையும் பீகாரி மொழி பேசுபவர்களுடன் சேர்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அதனால் பீகாரிகளும் பெருமையோடு இதை ஏற்றுக்கொண்டார்கள். சென்சசுக் கணக்கில் "பீகாரியும் இந்தியும்'' என்று போட்டுக் கொண்டார்கள். வரவர இந்திக்குத் தேசிய மொழி என பட்டம் தரப்பட்டது கண்டு "இந்தியும் பீகாரியும்'' என மாற்றினார்கள். கடைசியில் இரண்டும் சேர்ந்து இந்தி என்ற தலைப்புவந்து விட்டது அல்லது வருவித்துக் கொண்டார்கள்.

1951 சென்சசு கணக்குப்படி பீகார் மாநிலத்தில் மக்கள் தொகை 4 கோடியே 2 இலட்சம் பேர்கள் இதில் 3 கோடியே 20 இலட்சம் பேர்கள், அதாவது 100க்கு 80க்கு மேற்பட்டவர்கள் இந்தியே பேசுபவர்களாகக் கணக்குக் காட்டுகிறது. இந்த இந்தி பேசுபவர்களாகவுள்ள கணக்கு, தவறானதுஎன்பதை சென்சசு அதிகாரிகளே கூறிவிடுகின்றனர்.

பீகார் மாநிலத்து இந்தி பேசுவோர்கணக்கில் பீகாரிமொழிகள் மட்டும் அல்லாமல் உருது, தமாரியா குமாலி, சோட்டா, நாகபுரி, கவாரி, கார்வாரி, கார்வாளி. பிலாசுபுரி, சத்ரி ஆகிய பல் மொழி பேசுவோரையும் இந்தித்தலைப்புக்குள் அடக்கிவிட்டனர். இதைவிடப் பெரியதொரு புள்ளி விவரப்புரட்டு யாண்டும் இருக்க முடியாது

இனிச் கடைசியாக உத்திரப் பிரதேசத்தை எடுத்துக்கொள்வோம். அம்மாநிலம், இந்தி வெறியும், ஆதிக்க வெறியும் ஒருங்கே கிளம்பும் இடமாகவும் தேசியத் தலைவர்கள். ஆளும்கட்சித் தலைவர்கள் ஆட்சி அலுவலர்கள் முதல் அனைவரும் ஒருங்கே சேர்ந்து இந்தி ஆளும் மொழியவதற்கு வழிகோலும் இடமாகவும். மொழிப்போர் முனைசென்று வெற்றி கண்டுவரும் வீரர்கள் தங்கும் பாசறையாகவும் உள்ள தெனில் மிகையன்று.

இம்மாநிலத்தில் இந்தி பேசும் மக்கள் கணக்கையும் பார்க்க வேண்டுமா? ஒரே ஒரு சான்று காட்டினால் உண்மை விளங்கிவிடும் அதாவது 1931 இல் எடுத்த சென்சசுக் கணக்கு இம்மாநிலத்திற்குரிய மொழியான "இந்துசுத்தானி'' பேசுபவர்கள் நூற்றுக்கு 99 பேர் எனக் கணக்குக் காட்டுகிறது 1951 சென்சசுக் கணக்கோ "100-க்கு 99 பேர் இந்தியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்கள்'' எனக் கணக்குக் காட்டுகிறது. இது போதும் மொழி மாற்ற வேலைக்குச் சான்று. பல படத்துருவிப் பார்ப்பது வீண் வேலையாகும்.

1931-ல் எங்கோ பல பட்டறை மொழிகளில் ஒன்றாக மூலையிற் கிடந்த இந்தியை 1941-ல் முற்றத்துக் கிழுத்து வந்து "இந்தி அன்னை'' எனப் பெயர் சூட்டினார்கள். 1951-ல் இந்தி அன்னையை அரியணை யேற்றி "நாடாளும் அரசி'' என முடிசூட்டிவிட்டார்கள், ஆம், அறிவுள்ள பிள்ளைகளைப் பெற்ற இந்தி அன்னை, அரசு கட்டிலேறினாள். அபத்துப் பிள்ளைகளைப் பெற்ற ஏனைய அன்னைமார்கள் இந்தி அரசிக்குப் பணிப் பெண்களாயினர். பல்பல பன்னிப் பேசினும் இதுதானே உண்மைப் பொருள்.

வட இந்தியாவில், முக்கியமான பெரிய மாநில மொழிகளான, பீகாரி, இந்துசுத்தானி இரண்டும் பேரில்லாமலே மறைந்துவிட்டன. ஏனைய பெரு மொழிகளிலும் கைவைத்துள்ளனர். இவையன்றி 250-க்கு மேற்பட்ட சிறு மொழிகள் போன பக்கம் தெரியவில்லை. இந்திப் போர்வைக்குள் ஒழிந்திருக்கின்றன.

இப்பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மாற்றங்கள், கூட்டல்கள், மறைப்புக்கள் அனைத்தும் நீக்கப்பட்டு உண்மையில் இந்தியைத் தாய் மொழியாகக்கொண்டவர்களின் தொகைமட்டும் கணக்கிடப்பட்டால், ஏறத்தாழ ஒரு 5 கோடி மக்களும் 100-க்கு 15 விழுக்காடும்தான் தேருமென்பது நிச்சயிக்கலாம்.

இங்ஙனம் "செய்தக்கவல்ல'' செய்வதைவிட "இன்றைய நிலைமையில் ஆளும் உரிமை எங்களிடம் இருக்கிறது எவ்விதத் தகுதியோ பெரும்பான்மைக் கணக்கோ இல்லாவிடினும் எங்கள் மொழிதான் ஆட்சி மொழியாக வரவேண்டும்'' எனச் சொல்லியிருந்தால் வாய்மையாகவும் இருக்கும்.

செய் தக்கவல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங்கெடும்—தமிழ்மறை.

(1—5—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

– பேராசிரியர் சி. இலக்குவனார்

நன்னூலாசிரியர், நெட்டெழுத்தே வேண்டிய அளவு நீண்டு ஒலிக்கும் என்றும் அதன் அடையாளமாக நெட்டெழுத்தின் பின்னர் அதன் இனக்குற்றெழுத்து தோன்றி நிற்கும் என்றும்கூறியுள்ளார்.

இக் கருத்து தொல்காப்பியத்திற்கு மாறுபட்டது.

தொல்காப்பியர் முன்பு, மூன்று மாத்திரையாக ஒலித்தல் ஓரெழுத்துக்குக் கிடையாது என்றும் (நூற்பா 5) மாத்திரையை நீட்டிச் சொல்லவேண்டிய இடங்களில், வேண்டிய மாத்திரைக்கேற்ப எழுத்துக்களைச் சேர்த்து ஒலித்தல் வேண்டும் என்றும் (நூற்பா 6) கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

42 ஐ, ஔ என்னும் ஆயீரெழுத்திற்கு இகரம் உகரம் இசை நிறைவாகும்.

ஐ, ஔ என்னும் = ஐ, ஔ என்று சொல்லப்படும், ஆயீர் எழுத்திற்கும் = அவ்விரண்டு நெடில் எழுத்துக்களுக்கும், இகரம் உகரம் = இ, உ என்னும் இரண்டு குற்றெழுத்துக்களும், இசை நிறைவாகும் = (இசைகுன்றியவிடத்து) ஓசைநிறைப்பனவாகும்.

முந்திய நூற்பாவில் அந்தந்த நெட்டெழுத்துக்களுக்கு இனமான குற்றெழுத்துக்கள் வந்து ஓசை நிறைக்கும் என்றார்.

ஐ, ஔ எனும் இரண்டு நெடில்களுக்கும் இனமான குற்றெழுத்துக்கள் இல்லாமையால் அவைகளுக்கு உரிய குற்றெழுத்துக்கள் இவையென இந்நூற்பாவில் அறிவிக்கப்பட்டுள்ளது. 'ஐ'க்கு இகரமும், 'ஔ'க்கு உகரமும் ஆம்.

காட்டு: தைஇ; கௌஉ

43 நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி

நெட்டெழுத்துக்களாகிய ஏழும் ஓரெழுத்தானுகிய சொல்லாக வரும்.

ஓர் எழுத்தே தனியாக நின்று-பிற எழுத்துக்களால் தொடரப்படாமல் - பொருள் தருமாயின் சொல்லாகும். 'ஆ' என்பது 'பசு' என்னும் பொருள் தரும். 'கா' என்பது சோலைஎன்னும்பொருள்தரும். இவ்விடங்களில் இவை சொல் எனப்படும்.

44. குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே.

குற்றெழுத்து ஐந்தும் = குற்றெழுத்துக்களாகிய ஐந்தும், மொழி நிறைபு இல = ஓரெழுத்தாய் நின்று ஒருமொழியாய் நிறைதல் இல.

(முந்திய நூற்பாவினும் இந்த நூற்பாவினும் எழுத்து என்பது, உயிரையும் உயிர்மெய்யையும் குறிக்கும்)

45. ஓர் எழுத்து ஒரு மொழி, ஈர் எழுத்து ஒரு மொழி இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழிஉளப்பட மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

ஓர் எழுத்து ஒரு மொழி = ஓர் எழுத்தான் உண்டாகும் ஒரு மொழி, ஈர் எழுத்து ஒருமொழி = இரண்டு எழுத்தான் உண்டாகும் ஒரு மொழி, இரண்டு இறந்து = இரண்டு எழுத்துக்களைக்கடந்து பல எழுத்துக்களால் உண்டாகி, இசைக்கும் தொடர்மொழி = சொல்லாக வழங்கும் தொடர்மொழி, உளப்பட மூன்று = சேர மூன்று ஆகும், மொழிநிலை தோன்றிய நெறியே = சொற்கள் உருவாகி வழங்கும் நெறிக்கண்.

தமிழில் எழுத்துக்களால் சொற்கள் உண்டாகும் முறைமைபற்றி மூன்றுகப் பிரித்துள்ளனர். அவை, ஓரெழுத்து ஒரு மொழி, ஈரெழுத்து ஒரு மொழி, பல எழுத்து ஒரு மொழி என்பனவாம்.

இந்நூற்பாவால், ஒன்று, இரண்டு, பல எனக் கணக்கிடும் முறை, பண்டைத்தமிழகத்தில் இருந்ததுஎன்று அறியலாம்.

46. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்

மெய்யின் இயக்கம் = தனிமெய்களது வழக்கு, அகரமொடு சிவணும் = அகரத்தோடு பொருந்தும்

தனி மெய்களைச் சொல்லுங்கால் க, ச, த, ப எனக்கூறுவது எளிதாகும்.

47. தம் இயல் கிளப்பின் எல்லா எழுத்தும் மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை.

எல்லா எழுத்தும் = எல்லா எழுத்துக்களும், தம் இயல் கிளப்பின் = தமது இயல்பைச்சொல்லுமிடத்து, மெய்ந்நிலை மயக்கம் = இன்ன எழுத்தோடு இன்ன எழுத்து பொருந்தி இவ்வாறு வரும் எனும் நிலையினின்றும் மாறுபட்டுவருதல், மானம் இல்லை = குற்றம் இல்லை.

(தொடரும்)

பாடல் அரங்கம்

வழங்குக முறையே!

பள்ளியிற் கல்வி பயிலச் சென்ற
பருவப் பூக்கள்! பைந்தமிழ் மக்கள்
கட்டிடம் சரிந்ததால். கட்டுடல் சூழ்ந்தனர்.
சனியன் பெயர்ந்த சான்றைக் காட்டி,
சழக்கர் கூட்டந் தப்பிட முயல்வதை
அரசினர் உணர்ந்தே ஆவன செய்ய
வேண்டும், என்று விரும்பினர் மக்கள்.
பலருங் கூடும் பயன்சேர் இடமெலாம்;
பழுதை நீக்கிப் பண்ப டுத்தி
இதுபோல் பிறிதொரு இன்னல் நேரா
வண்ணம் பார்த்திடல் மாநில வரசின்
கடமை யன்றோ? கட்டிட வழக்கிற்
குற்றம் பார்த்துச் சுற்றம் நீக்கி
தீச்செயல் தடுத்திடத் தீயரைத் திருத்த
அறமன்றில் நிறுத்தி யன்னர்
வன்செயற்குத் தண்டனை வழங்குக முறையே!

— இரா. சுந்தரராசு

பாரதிதாசர்க்கு இரங்கற்பா

ஒப்பில் புலவர் உயர்வில் கலைஞர்
இப்புவி கண்ட எதிரிலா வலத்தினர்
தமிழ்த்தாய் புதல்வர் தனித்தமிழ்க் காவலர்
தாழ்த்தாத் தலையர் தளரா நெஞ்சினர்
பாரதி தாசர் பான்மை பலப்பல
பாரும் அறியும் ஊரும் உணரும்
இத்தகு சிறப்பில் எமமுறு கவிஞர்
கத்தவே எம்மைப் பிரிந்தது என்கொல்?
தமிழர் உணர்வறைப் போயது கண்டோ?
தமிழ்மொழி தமிழகத்தில் தளர்வுற உணர்ந்தோ?
இந்திக் கிங்கே இடம்வரக் கண்டோ?
எதனுல் புத்தேள் உலகம் புக்கார்?
எல்லாம் தெள்ளிதின் உணரும்
இறையே எமக்குச் செய்க உரையே.

— க. தி. நாகராசன்

நாவேந்தர் யாவர்க்கும் நற்கவிதை தந்துவந்த
பாவேந்தர் மீதாசைப் பட்டகொடுஞ்—சாவேந்திக்
கொண்டதனுல் நாடும் "குறள்நெறி"யும்
என்றென்றும்
கண்டடையாத் துன்புறுதல் காண்.

- புலவர் மு. சிக்கந்தர்

குறள் நெறிக்கு வாழ்த்துரை

காலத்தை வென்றே நற்காட்சிதரும் வள்ளுவனின்
கோலக் கருத்தைக் குறிப்புடனே அள்ளிவரும்
சீலக் குறள்நெறியே செந்தமிழர் வாழ்வொளியே
ஞாலத்தில் வாழ்க நயந்து.

எல்லோரும் போற்றும் இணையில்லா நன்முறையில்
வல்லான் குறளான் வகுத்திட்ட நன்னெறியால்
வல்லே விரைந்து வாழவழி காட்டுகின்ற
நல்லிதழே வாழ்க தழைத்து.

— வை. சந்திரசேகரன்

ஓயாத கவிதைத்தேன்

1 முல்லைமலர் எனவிளங்கு தமிழைக் காத்த
மூவேந்தர் பரம்பரையின் முதல்வ னுனாய்!
சொல்மலர வில்லையடா இறந்த சோகம்!
சுட்டெரிக்கக் கனலானாய்! கவிதைத் தேனீ!
எல்லையிலாப் பெரும்பயணம் தொடங்கி
விட்டாய்
எரிமலையே தமிழ்காத்த வலிய கோட்டை
கல்லுடைந்து வீழ்ந்ததுவோ? கால வேந்தன்
கைகளினைப் பஞ்சணையாய் ஆக்கிக்
கொண்டாய்

2 தூயதமிழ்க் கணையெடுத்துப் பகையை வென்று
தூளாக்கித் தலையெடுத்தாய்; குயிலதாகி
ஓயாத கவிதைத்தேன் ஊற்றி வைத்தாய்
உன்மொழியால் தென்னகத்தார் நெஞ்சில்
வேகம்
பாய்ந்ததடா பகைமுடிக்கத் திரண்ட காலை
படை முதல்வா நீ பறந்தாய் உணர்ச்சி
வெள்ளம்
ஓய்ந்ததடா உன் முடிவால் புரட்சி கொண்ட
உன்னுருவம் நெஞ்சலையில் நின்று பாடும்.

3 பொங்குகடல் எனவெழுந்த புதுமைச் சொற்கள்
புகுந்தவிடம் தமிழ்வளர்ந்த வீடு கோலத்
திங்களெனும் நிலவானுய் புதுவை தந்த
தீக்காடே உன்பெயரால் பகைவர் மூச்சு
மங்கியதே எதிர்பாரா முத்த மீந்தாய்
மாண்டாய்நீ தென்னகத்தின் தமிழியக்கச்
சிங்கமென வாழ்ந்திட்டாய் பயணங் கொண்டாய்
செந்தழலில் உன்னுருவம் சிதைந்த தம்மா!

4 வாளெடுத்த பாண்டியன்போல் தமிழெடுத்து
வந்தபகை துணித்ததிறம் சொல்லடங்கா
தோளெடுத்து நீகிளம்பிக் கவிதை சொன்னுல்
தொல்லினத்துத் தமிழ்மறவர் துடித்து நிற்பார்
மாளாத பெரும்புலமை மலர்ந்த நெஞ்சம்
மக்களுளத் தளவிளக்கு மறைந்த தந்தோ
தூளான மட்கலம்போல் ஆன தந்தோ!
துணையிழந்த தலைவிபடும் துயர மம்மா!

- புலவர் நா. மீனவன்

......

கூற்றே உண்மை கூறு!

அன்னைத் தமிழை அரியிருக்கை
அமர்த்த வுழைத்த அடலேற்றை
முன்னை நுழைத்த மூடமெலாம்
முறிக்க இசைத்த முறையூற்றைப்,
பொன்னை நிகர்பா புரிந்திசையார்
புரட்சிக் கவியைத் தமிழ்ப்பேற்றைச்,
சென்னை நகரில் சிறையெடுத்துச்
சென்ற தேனே சிறு கூற்றே?

-- காரை. இறையடியான்

குறள் நெறி

தமிழ் வாழ்க

மலர் 1 | வைகாசி 2 (15-5-1964) | இதழ் 9

இதுதான் மக்களாட்சியா ?

மக்கள் நன்மைக்காக மக்களால் மக்களைக் கொண்டே ஆளப்படுவது மக்களாட்சியாகும். இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு மொழியினரும் சமயத்தினரும் கொள்கையினரும், நாற்பதுகோடிக்குமேல் வாழ்ந்தபோதிலும், மக்களாட்சி முறையைப் பின்பற்றி உலகம் புகழுமாறு ஆட்சி செலுத்துகின்றோம் என ஓயாது பறையறைந்து வருகின்றனர் ஆளுங்கட்சியினர்.

இந்தியக்கூட்டரசு ஆட்சியை நடத்திவரும் கட்சியினர் மூன்று தேர்தல்களிலும் வெற்றிபெற்றுப் பதவிப் பீடத்தில் அமர்ந்திருப்பது உண்மைதான். இவ்வாறு அமர்ந்திருப்பது மக்களாட்சி முறைகளைப் பின்பற்றி வருவதன்பயனாலேவா? அல்லது வேறு முறைகளைக் கையாண்டு வருவதன் தன்மையாலா?

வறுமை, அறியாமை, கல்வியறிவு இன்மை, அச்சம், பதவிப்பற்று, எப்படியும் உயிர்வாழவேண்டும் என்ற நோக்கம் முதலியன நிறைந்திருக்கும் இப்பெருங்கண்டத்தில் மக்களாட்சி முறைக்கு மாறாகச் சென்றாலும் தடுத்து நிறுத்த எவரும் முன்வருவாரா? வந்தாலும் வெற்றிபெறல்கூடுமா?

இந்தியக் கூட்டரசுப் பொறுப்பை ஏற்று நடத்திவரும் ஆளுங்கட்சியினர், மக்களாட்சிமுறையில் செல்லவில்லையென்பதற்கு இந்தியக் கூட்டரசு ஆட்சிமொழிபற்றி அவர்கள் கடைப்பிடித்துவரும் கொள்கையே தக்க சான்றாக அமையும்.

'கூட்டரசு' என்பது பல அரசுகளும் சேர்ந்து அமைத்துக்கொண்டுள்ள அரசாகும். 'கூட்டரசு' ஆட்சியில் எல்லா அரசுகளுக்கும்-மாநிலங்களுக்கும்-சம உரிமையும் வாய்ப்பும் இருத்தல் வேண்டும். இல்லையேல் கூடிவாழும் கூட்டரசுக் கொள்கை மாய்ந்து ஒற்றையாட்சித்தன்மைமேலோங்கிவிடும். இந்தியக்கூட்டரசு உண்மையாகவே கூட்டரசாகவே என்றும் நீடித்திருக்கவேண்டும் என்றால் கூட்டரசுமொழிகளும் ஒன்றாகிய இந்திக்குமட்டும் தனி உரிமையும்செல்வாக்கும் அளித்தல்பொருந்தாதுஇந்திமொழி ஒன்றுதான் இந்தியக் கூட்டரசின் மொழி என்று கூறி ஏனைய அரசுமொழிகளை இரண்டாம்தர நிலைக்குத் தள்ளிவிட்டனர். இச்செயல் கூட்டரசுக்கொள்கைக்கு ஏற்றதன்று என அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் பெரியோர்களும் எடுத்துரைத்துள்ளனர். தமிழகத்தில் எதிர்க்கட்சியாய் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி முதன்மையை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சிசெய்து வருகின்றது. அதன் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பிறரும் சிறைக்குச் சென்று கொண்டு இருக்கின்றனர். இந்தியக்கூட்டரசு மக்களாட்சி முறையில் நம்பிக்கையும் பற்றும் கொண்டிருக்குமானால், இந்திக்கு முதன்மை தருவதை நிறுத்தி இருத்தல்வேண்டும். இந்தி முதன்மையை எதிர்ப்போரின் கூற்றுகளைச் செவிமடுத்துத் தாம் கடைப்பிடித்து வரும் இந்திமொழிக்கொள்கையை நெகிழவிட்டிருக்கவேண்டும்.

இந்தியக்கூட்டரசு அவ்வாறு செய்திலதே. மாறாக இந்திமுதன்மையை விரும்பாதார்மீது சுமத்தும் செயல்முறைகளில் ஈடுபட்டுவருகின்றது.

இந்திய அரசுத்துறைப் பணியினரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய தேர்வு மொழி இந்திதான் எனக் கூறியுள்ளது.

இந்திய அரசுத்துறைப் பணியில் உள்ளோர் இந்திமொழிப் புலமை பெற்றாகவேண்டும் என அறிவித்து, பணியில் அமர்ந்துள்ளோரை இந்திமொழி படிக்குமாறு வற்புறுத்திவருகின்றது. அவர்கள் அலுவலக நேரங்களிலேயே இந்தியைப் படிக்குமாறு கட்டாயப்படுத்தி வருகின்றது. படிக்காவிட்டால் வேலையுயர்வோ ஊதியஉயர்வோ கிட்டாதுஎனத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

இந்திமொழியைப் பயிற்சிமொழியாகக்கொண்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றைத் தென்னாட்டில் தோற்றுவிப்பதற்கும் முயன்று வருகின்றது.

இம்மட்டோடு நிற்கின்றதா?

இந்திய மொழிகள் அனைத்தும் இந்திமொழி எழுத்தாம் தேவநாகரியில் எழுதப்படவேண்டுமெனக்கூறி அதற்குரிய செயல்முறைகளிலும் ஈடுபட்டுள்ளது.

ஒவ்வொரு மொழிக்கும் அதனதன் எழுத்தே உடலாகும். உடலாம் எழுத்தை அழித்தபின் உயிராகும் மொழி வாழ்வது எங்ஙனம்? ஆகவே ஏனைய மொழிகளை அழித்துவிட்டு இந்திமொழி ஒன்றைமட்டுமே நிலைக்கச்செய்வதற்கு ஒல்லும் வகையால் எல்லாம் ஓயாதுமுயன்று திட்டமிட்டுச்செயல் புரிந்து வருகின்றனர்.

இந்திய மொழிகளின் தாய் எனக் கருதத்தகும் நம் தாய்மொழியாம் தமிழை யிழந்தபின்னர் நாம் வாழ்வது எற்றுக்கு? மொழியிழந்து. வாழ்விழந்து, மானமிழந்து வாழச்செய்வதா மக்களாட்சிமுறை? உண்மையான மக்களாட்சி முறையில் ஒவ்வொருவர் நலனும் உரிமையும் காக்கப்படல் வேண்டும். இன்றேல் அது மாக்களாட்சியாகத்தான் கருதப்படும்.

இந்திமொழி எழுத்தைத் தமிழுக்குரிய எழுத்தாக ஆக்குவதைத்தடுத்து நிறுத்தல்வேண்டும், ஒற்றுமையின்பேரால் நம் உயிரனையமொழியை அழிக்க வரும் திட்டத்தை உயிர் கொடுத்தேனும் தடுத்து நிறுத்த ஒன்றுபட்டெழுதல் தமிழரின் தலையாய கடனாகும். வேற்றுமைகளை மறந்து வீறுகொண்டு எழுமின். வெல்க தமிழ்,

புதிய ஆளுநர்.

நமது தமிழ் மாநிலத்திற்கு ஆளுநராகப்பதவி ஏற்றுள்ள மைசூர்ப் பேரரசர் செயசாமராசர் உடையார் அவர்களை அன்போடு வரவேற்கின்றோம்

செய்திகள் ....

முத்தமிழ்க்காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம்

பம்பாய்க்குச் செல்கிறார்.

இம்மாதம் 14ஆம் நாள் காலை 9 மணிக்கு சென்னையிலிருந்து பம்பாய் மெயிலில் புறப்பட்டு 16, 17ஆம் நாட்களில் பம்பாய் செம்பூர்த் தமிழ்ச் சங்கத்தின் 9ஆம் ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறார்.

18ஆம்நாள் பம்பாய்த் தமிழ்ச்சங்கம் அவருக்கு வரவேற்பு அளிக்கிறது. 19ஆம் நாள் பம்பாயை விட்டுப்புறப்பட்டு குந்தக்கல்வழியாக 21ஆம்நாள் பெங்களூருக்குச் சென்று 23, 24ஆம் நாட்களில் தமிழகப் புலவர் குழுவை நடத்தி 26ஆம்நாள்காலை திருச்சி வந்து சேர்வார் எனத் தெரிகிறது.

'மைசூர்' சங்க காலத்தில் 'எருமையூர்' என அழைக்கப்பட்டுள்ளது. அங்குவழங்கிய மொழியும் தமிழ்தான். இப்பொழுது அங்குவழங்கும் கன்னடமும் தமிழின் உருமாற்றமொழிதான். பழங்கன்னடம் என்பதும் தமிழேதான். அரசரின் பெயருக்குப் பின்னர் பொருந்தியுள்ள 'உடையார்' எனும் சிறப்புப்பெயரும் தமிழ்ச் சொல்லே என்பது யாவரும் அறிவர். ஆகவே நமது புதிய ஆளுநர் தமிழரே யாவர் என அகமகிழ்ந்து வரவேற்கின்றோம்.

நம் ஆளுநர் அவர்கள் கல்விப்புலமையும் பண்பாட்டுச் சிறப்பும் கலைப்பற்றும் வள்ளன்மையும் உடையவர்கள் என்பது உலகம் அறியும். இத்தகு சீரிய சான்றோர் நம் ஆளுநராக வாய்த்திருப்பது நமது பெரும்பேறேயாகும். இவர்கள் காலத்தில் தமிழக நலனும் உரிமையும் காக்கப்பட்டுத் தமிழ்மொழியை அழிக்கவரும் இந்தி முதன்மை நீக்கப்படும் என எதிர்பார்ப்போம்.

இந்திமுதன்மையை எதிர்த்து ஆயிரக்கணக்கில் சிறைசென்றுகொண்டிருக்கும் நிலையையும், இந்திமுதன்மையால் இந்திய ஒற்றுமை சீர்குலையும் என்பதையும் இந்தியக் கூட்டரசுத் தலைமைக்கு எடுத்துரைத்துத் தமிழ்மொழி உள்ளிட்ட மாநிலமொழிகளின் உரிமையைக் காத்து மக்களாட்சி செவ்வனே நடைபெற வழிவகுப்பாராக.

பெருமைமிகு உடையார் அவர்கள் தமிழகத்துக்குப் புதியவரல்லர், ஆளுநர் என்ற முறையில்தான் புதியவர். தமிழக ஆளுநர் பதவி அவர்க்குச் சீரும் சிறப்பும் தருவதாக. வருக ஆளுநர் அவர்கள்; வாழ்க பல்லாண்டு.

குறள்நெறிக் கழகம்

(இணைப்பு)

தமிழ்க்காப்புக் கழகம்

மணப்பாறை, திருச்சி மாவட்டம்.

...தங்களது 'குறள்நெறி' பொன்னிதழ் வழியே நல்லுணர்வுகளை வளர்த்துவரும் நாங்கள், தங்களது வேண்டுகோட்படியே, இந்நகரில் குறள்நெறிக் கழகம் – தமிழ்க்காப்புக்கழகம், இரண்டினையும் உருவாக்கி செயல்பட்டு வருகிறோம். கழகங்களின் தொடக்கம் எளிமையோடிருந்தும், உறுதியோடு உழைக்க முற்பட்டு, மெல்ல மெல்ல வளர்ச்சியூட்டி வருகின்றோம். மேன்மேலும் நன்கு வளர்ந்து, நாட்டுக்கும், தாய்மொழிக்கும், தமிழ் மரபுக்கும் செவ்வனே தொண்டாற்றும் என்ற உறுதிமொழி அனைவருடைய உள்ளத்தினின்றும் மலரும் உண்மை மொழியாகும்.

நமது இனிய 'குறள்நெறி' இதழ்வழியே அறிந்தபடி **பாவாணர்மணிவிழா**வுக்கு எங்களால் ஆவன செய்ய முடிவு செய்யப்பட்டது; முடிவோடு நில்லாது முயன்றும் வருகிறோம். தமிழ்த்தொண்டரை, பெருமைக்குரியசான்றோரைக்காக்க எங்களது முழு ஆர்வத்தையும், உழைப்பையும் ஈந்து, சிறு பொருளேனும் திரட்டித்தர முனைந்துள்ளோம். ஞாயிறு மட்டுமே இக்கழகங்களின் உறுப்பினர்களுக்கு ஓய்வுநாளாதலின், ஞாயிறு தோறும், சுற்றுப்புற கிராமங்களுக்குச் சென்று தமிழின் சிறப்பைக் கூறி பொருள் திரட்டும் வேலைகளில் ஈடுபட்டுள்ளோம்.

குறள்நெறிக் கழகத்தின் வழியே இதனைப் பாவாணர் மணிவிழாக்குழுத்தலைவருக்கு அனுப்புவதே எங்கள் நோக்கம். இதுவரையில் 300 வெண்பொற்காசுகள் குவிந்துள்ளன. (3 ஞாயிற்றுக்கிழமைகளில் 15 சிற்றூர்களில் சேர்த்தது.) மேலும் சேர்க்க முடியும் என்ற உறுதியும் உவகையும் கொண்டுள்ளோம். இத்தொகையை அப்போதைக்கப்போது தங்களுக்கு அனுப்பிவைக்க விரும்புகிறோம்.

ரிஷியூர் இளவரசன்,
செயலர்.

குறிப்பு: உருபாய் நூற்றொன்று வந்துசேர்ந்துள்ளது. மணிவிழாக்குழுவிடம் சேர்ப்பிக்கப்படும்.

குறள்நெறிக்கழகம்-தமிழ்க் காப்புக்கழகம் இரண்டிற்கும் தொண்டாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டோர்:

தலைவர். **இமயவரம்பன்** (பருத்திவளர்ச்சி ஆய்வர், "வள்ளுவர் இல்லம்", மணப்பாறை)

துணைத்தலைவர்: **சோலையாழ்**, (அஞ்சலக எழுத்தர், மணப்பாறை)

செயலர்: **ரிஷியூர் இளவரசன்.** (தமிழ்நாட்டு மின்பேராய இளம்பொறிஞர் 'தமிழ்உலகு' வண்டிப்பேட்டைத் தெரு மணப்பாறை)

துணைச் செயலர்: **பட்டுக்கோட்டை வளவன்** (மின்பேராய எழுத்தர்)

பொருளாளர்: **அ செல்வம்.** (மணப்பாறை ஊராட்சிக் கூட்டு மன்றம் மணப்பாறை)

துணைப்பொருளாளர்: **சே நித்தியானந்தன்.** (கதர் விற்பனை நிலைய எழுத்தர் மணப்பாறை)

கருத்து அரங்கம்

இந்தியால் தமிழுக்குக் கேடு...?

வினா 4: இந்தி மொழியால் எங்காவது ஓர் இடத்தில் தமிழ்மொழி மறைந்திருக்கிறதா?

விடைகள் :

வட்டாரமொழிப்பற்று இந்தியைப் புகுத்துவதற்குத் தடையாயிருக்கும் என்று அரசினர் கருதுவதால், தமிழ் மொழிப் பற்றூற்றும் இலக்கியப் பகுதிகளையும், தமிழ்ப் பற்றையும் தடை செய்கின்றனர். தற்போதைய தமிழ் நாட்டு முதலமைச்சர் "வாழிய செந்தமிழ்" என்ற பாரதியின் பாட்டைப் பள்ளிகளில் பாட வேண்டாமென்று வேண்டியதும், இளங்கலை, இளமறிவியல் மாணவர்க்குத் தமிழ் இலக்கியப் பகுதியில் அமைந்த "கால்கோட் காதை"யை நீக்கியதும் இதற்குச் சான்று. இவ்வாறு மொழிப் பற்றூட்டும் பகுதிகளை நீக்குவதால் அவ்விலக்கியப் பகுதிகள் மறைய வாய்ப்புண்டு.

—மு. க இராசமாணிக்கம்

——

பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, படிக்கின்றவர்களில் பெரும்பாலோர் பொருளுக்காகத்தான் படிக்கின்றார்கள் என்பதை பாரதம் அறிவார் என நம்புகின்றேன். எனவே இந்தி படிப்பதால் எளிதாக வேலையும் அதன் மூலம் நல்ல பொருளையும் ஈட்டக் கூடிய வாய்ப்பை அரசினரால் உண்டாக்கப்படுவதால் இந்தி மொழியால் தமிழ் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை மாணவர்கள் மனதிலிருந்து மறைக்கப்படுகின்றது. தமிழை வளர்க்க வேண்டிப் படிக்கின்ற மாணவர்களிடமிருந்தே தமிழை மறக்கும்படி. தமிழின் நிலை எந்த நிலைக்குச் செல்லுமென்று சொல்லாமலே புரிந்து கொள்ளலாம் எனவே இந்தியைப் புகுத்தும் இந்நிலை நீடித்தால் தமிழ் ஓரிடத்தில மட்டுமல்ல, ஆயிரமாயிரம் இளம் உள்ளங்களிலிருந்து இந்தியால் மறைக்கப்படுகின்றது என்பதை உறுதியுடன் கூறுகின்றேன்.

—பொன்னியின் செல்வன்

——

தமிழ் நாட்டில் இந்தியை ஆதரிப்பவர்களில் சிலர், ஆங்கிலத்தால் தமிழ் அழிவுறுகிறது என்பதைப் பலவாறாக எடுத்துக் காட்டியுள்ளனர், (சிறப்பாகத் தமிழரசுக் கழகத்தினரும் பொதுவுடைமைக் கட்சியினரும் தமிழகத்தில் இதனை நன்கு விளக்கியுரைத்து விழிப்புணர்ச்சியூட்டுகின்றனர்.) சின்னஞ் சிறிய சிற்றூர்களில் கூட ஆங்கிலச் சொற்கள் கற்றவர், கல்லாதவர் வாயில் வரக் காண்கிறோம் ஆயிரக்கணக்கான எடுத்துக்காட்டுக்கள் காட்ட முடியும்.

ஒரு எடுத்துக் காட்டு :-

குழப்பம் என்பது தமிழ்ச் சொல். ஆங்கிலத்தில் உள்ள 'ரேசன்' (**Ration**) என்ற சொல் சேர்ந்து குழப்ப ரேசன் என்று முதிர்ந்த பாட்டியின் வாயிலாக வழங்குவதைக் காணலாம். இவ்வாறு ஆங்கிலத்தால் தமிழ் கெடுகிறது என்பதைப் பலரும் ஒத்துக்கொள்ளும்போது அதே இடத்தில் இந்தி வருவதால் தமிழ் கெடாது என்று எப்படிக் கூற முடியும்? ஆங்கிலத்தால் விளைந்த தீமைகள் இந்தியால் விளையாது என்று எவ்வாறு கூற முடியும்?

—பா செயப்பிரகாசம்

——

தமிழ் மொழி இந்தியால் பற்பல இடங்களில் பல வகைகளில் மறைந்து கொண்டிருக்கிறது முதலாவதாக இந்தியப் பாராளுமன்றில் உறுப்பினர் இந்தி அல்லது ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதேனும ஒன்றில்தான் தன் உரையைத் தொடங்க முடியும். இவ்விரு மொழிகளிலும் பேச வியலா உறுப்பினர் தம் தாய் மொழியில் பேசினால் எதிர்ப்பைத்தான் அவர் அடைகின்றார். இரண்டாவதாக மத்திய அரசு அலுவலர் தேர்வுக் குழுவின் (**Union Public Service Commission Examination**) தேர்வுக்கு இந்தியே இன்றியமையாத மொழி. இந்தியோ அல்லது ஆங்கிலமோ தெரியாத ஒரு தென்னாட்டுக்காரர் இந்தியாவின் குடியரசுத் தலைவராக முடியாது இது மூன்றாவது சான்று நான்காவதாக முதல் வினாவிற்கும் மூன்றாவது வினாவிற்கும் அளித்த விடைகள் இவ் (4) வினாவிற்கும் பொருந்துவனவாகும்.

—மு. தங்கராசு

——

எரிகின்ற நெருப்பில் கைவைத்துப் பார்த்த பின்னரே சுடுமென்ற கொள்கையை ஒப்புக்கொள்ளும் கண்ணற்ற குருடர்களினும், முன்னரே சுடுமென்று அறிந்து விலகிக் கொள்பவர்கள் அறிவுடையவர்களாவர். அதைப்போல் இந்தியைத் தமிழ் நாட்டில் புகுத்தி அதனால் தமிழ் அழிகிறதா? இல்லை வாழ்கிறதா? என்று ஆராய்ந்து கொண்டிருக்க இது நேரமன்று. எந்த ஒரு மொழியும் பிற மொழி மீது வன்மையாக ஆதிக்கம் செலுத்தினால் அதன் ஆதிக்கத்திற்கு உட்பட்ட மொழி அழிவது கண்கூடு. இவ்வாறு இன்று உலகத்தையே வளைத்துக் கொண்டிருக்கும் ஆங்கில மொழி, பிரெஞ்சு, இலத்தீன் போன்ற பல மொழிகளை விழுங்கியுள்ளதை நாம் அறியலாம். எனவே இந்தி மொழியால் தமிழ் மறைந்திருக்கிறதா, மறையவில்லையா என்று ஆருடம் கணித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அழிவது உறுதி.

—வி முத்துச்சாமி

——

இரயில்வே நிலையங்களின் பெயர்களை இந்தியில் எழுதினார்களே! தபால் தலைகளிலும், அட்டைகளிலும் தமிழா காணப்படுகிறது? வானொலி நிலையத்தில் தமிழ் மொழி சாகாமல் செத்துக்கொண்டிருக்கிறது பள்ளிகளில் தமிழ் படாத பாடுபடுகின்றது. இன்னும் சாகவில்லையே தமிழ்! என்ற ஏக்கம் வேண்டாம், சாகாமல் செத்துக் கொண்டே இருக்கிறது என்பது உண்மை என்பதை உணர்ந்து இன்றே ஆவன செய்க. அஃதே அறிவுடைமை. சாகட்டும் எழுப்புகின்றேன் என்பது வெள்ளம் வந்தபின் அணை போடலாம் என்ற மதியற்ற நினைவின் மறுஉருவம் ஆம்.

—சேசுராசன், பி ஏ.

——

'சத்தியமேவ ஜயதே" எனத் தமிழ்நாட்டு அரசாங்க முத்திரையில் எழுதப்பட்டுள்ளது. உண்மை வெல்க என்று எழுதினால் என்ன கேடு வந்துவிடுமோ? தமிழ் மொழி வாழும மண்ணில் 'சத்தியமேவ ஜயதே' மட்டுமல்ல: பிரச்சார் சபா...வஸ்திராலயா என எண்ணற்ற இந்திச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. கிராம சேவக் என்பதற்குப் பதிலாகச் 'சிற்றூர்த் தொண்டர்' எனக் கொண்டால் பொருள் குன்றிவிடுமா? இனிமை செத்து விடுமா? .. ஆயினும் இந்திச் சொற்கள் வடக்கிலிருந்து வரவேற்கப்படுகின்றன.

இந்தியால் தமிழ் எங்காவது ஓரிடத்தில் மறைந்துள்ளதா என்பதைக் கண்டறிய, தேடி அலைய வேண்டாம். தாய் மொழியாகிய தமிழ் ஒலிக்க வேண்டிய இளம் நாக்குகள், இன்று 'கலம் — கிதாப் — லட்கி — அச்சா" என முழங்குகின்றன: இதனால் இந்தியால் தமிழின் சிறப்பு மறைந்து வருவது காணலாம். இந்தி படித்தால் உதவிப் பணம் கிடைக்கும் என்ற அற்ப ஆசையால் இந்தி பண்டிட்களாகி வரும் தமிழர்களிடம் தமிழின் உயர்வு மறைந்து வருவதைக் காணலாம். "இந்தியை எதிர்ப்பவர்கள் எங்கள் தமிழ்நாட்டில் இல்லை"

(அடுத்த பக்கம் பார்க்க)

தூயதமிழ்க் காவலர்

அண்ணல்தங்கோவின்

அறுபதாமாண்டு நிறைவு நாள்

விருந்தும் பாராட்டுதலும்

தூயதமிழ்க்காவலர் அண்ணல்தங்கோ அவர்களின் அறுபதாமாண்டு நிறைவு நாள், திருவள்ளுவர் ஆண்டு 2520 சித்திரை முதல் நாள் வந்தெய்தியது.

தூயதமிழ்க் காவலர் தம் ஒப்பற்ற நாட்டுரிமைப் போராட்டப் பெரும் பணிகளையும், தூய தமிழ்க்காப்புப் பணிகளையும், திருக்குறள் அறமுழக்கப் பணிகளையும் தன்னுணர்வுப் பணிகளையும் கட்டாய இந்தி எதிர்ப்புப் (கி. பி 1937—38) போர்ப்பணிகளையும், தென் இந்திய மக்கள் உரிமை நலக் காப்புப்பெரும் பணிகளையும், இகலார் எவர்க்கும்—எதிர்ப்புடைமை எதற்கும் சிறிதும் அஞ்சாமல், சோர்ந்துந் தனித்தும் ஆற்றிய-ஆற்றும் நிலையான நேர்மையான பணியையும், தமிழ்த்தாய்க்கும், திருக்குறளுக்கும், மக்களுக்கும் ஆக்கம் நல்கும் அரும் பெரும்பணிகளையும்பாராட்டுவான்வேண்டி, ஷையாண்டு சித்திரை முதல் நாள் திங்களன்று இரவு 9 மணிக்கு வேலூர், வேலைப்பாடி பெருமாள் கோயிலில் தூயதமிழ்க் காவலர் தம் அன்பர்களாலும் ஆருயிர் நண்பர்களாலும், சிறப்பாக நற்றமிழ்க்குடிவழிவந்த தூயதமிழ்க்காவலர் தம் உண்மை நண்பர் (காலம்சென்ற இரா. வெ. மாமணியார்) (ஆர். வி மாணிக்கனார்) தம் அருமைத் திருமகனார், திருமகள் கலைமகள் மக்கள் உந்துவண்டிக் குழுவின் தலைவர், தனித்தமிழ்க்காவலர் தமிழ்த் திருவாளர் மா. உலகண்ணலாலும் அவர் தம் ஆருயிர்த்துணைவியார் மா உ பொற்கொடி அம்மையாராலும் சிறந்த இனிய தமிழ் விருந்தளிக்கப்பட்டது. விருந்துப்பட்டி. தூய தமிழில் அச்சடிக்கப்பட்டு விருந்தினர் அனைவருக்கும் தரப்பட்டது. இவ்வினிய தமிழ் விருந்தும் விருந்தளித்த முறையும் விருந்தினரால பலபடப் பாராட்டப்பட்டன! இந்நல்விருந்திற்கு வேலூர் நகரம், காட்டுப்பாடி நகர விரிவகம் ஆகிய இந்நகரத்துப் பெருமக்களும், வெளியூர் மக்களும், தாய்மார்களும், தண்டமிழ்ப்புலவர்களும் உவந்து வந்துகளித்தனர். விருந்து நடைபெறும் பொழுதும் பாராட்டுக் கூட்டத் தொடக்கத்திலும் பிறகும் தூயதமிழ்க்காவலர் இயற்றித்தனித்தமிழ்க்காவலர் மா உலசண்ணலவர்களால நாடாப்பதிவு செய்யப் பெற்ற "யானொரு தமிழன்!" என்னும் நல்லாண்மை—நல்லறத் தமிழர் கடமைகள் தமிழ்ப்பணிகள் குறிக்கும் தமிழர் உறுதிமொழிப் பாட்டுப் பாட வைத்தது விருந்தினர் உள்ளத்தைக் கவர்ந்தது

விருந்து முடிந்த பின்னர், இரவு ஒன்பதேமுக்கால் மணிக்கு, வேலூரில் தலைசிறந்த வழக்கறிஞராய்த் திகழ்பவரும் குடியேற்றம் திருமகள் நூல் ஆலை செயல் மன்றத் (நெறியாளர் தம்) துணைத்தலைவருமான தமிழ்த் திருவாளர் வ. சி சதாசிவனார் (பி. ஏ., பி. எல்) அவர்கள் தலைமை தாஙகினார். தூய தமிழ்க்காவலர் தம் இளமைக் காலம் தொட்டாற்றிவரும் பல வகைப்பட்ட நாட்டுநல — மொழி நல—இன நல— திருக்குறள் அறநலப் பொதுப்பணிகளைக் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசி, மீண்டும் அவர் இந்திய அரசியற் பேரவையில் (காங்கிரசில்) சேர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தூய தமிழ்க்காவலர் நீண்டாநாள் இனிதாக வாழவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்,

தூயதமிழ்க்காவலர் நீடுழி வாழ்ந்தும் தூயபணிகளாற்ற வேண்டுமென்று தமிழ்ப் பெரும்புலவர் மே. வி. குழற்கோமான் (வேணுகோபாலப் பிள்ளை) முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன், 'குறள்நெறி' எழுத்தாளர் செந்தமிழ் மாமணி சி. இலக்குவனார், 'தென்மொழி' எழுத்தாளர் பெருஞ்சித்திரனார், தமிழ்ப்பேரறிஞர் மா.ச. அரசமாணிக்கனார், சிறுவை ந. இனியனார், சென்னை வண்ணை மலர்க்கொடி அம்மையார், மணலிங்கனார், நாகை நிலக்கிழார் சௌ. இரா. நாயுடு அவர்கள், பேரளூர் அரசகோபாலனார், வே. கோ. செந்தமிழ்க்கோமகனார், பாண்டரங்கனார், குத்தூசிக் கோமகன் குருசாமியார், ஆரணி நேசவல் படத்துறையார் கா. ப. இராமசாமி முதலியார், உலைக்காசி ச. கோவேந்தனார் முதலியோர் பாராட்டுச்செய்தியும் பரிசும் செலுத்தியிருந்தனர்.

தூயதமிழ்க்காவலர் தம் மகளிர், ஆசிரியை மு. அ. செந்தமிழ்ச்செல்வி நல்லறநம்பியும், ஆரணி மகளிர் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியை மு. அ. அறிவுக்கரசி இளையபெருமாளும் தேவிகாபுரம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியை மு. அ. நாவுக்கரசி-நா, உலகஅரசனும் தனித் தமிழ்க்காவலர் மா. உலகண்ணல், மா. உ. பொற்கொடி அம்மையாரும் புத்தாடைகளும், சேலைகளும் நிலை வெள்ளி உணவடுக்கும், பட்டுப்புடவைகளும், புத்துடைகளும் அளித்துத் தூய தமிழ்க்காவலரையும் அவரது வாழ்க்கைத்துணைவியார் மு. அ. சிவமணி அம்மையாரையும் நறுமண மலர்மாலைகள் அணிவித்து வாழ்த்தினர். இந்நற்காட்சி காணத்தக்கதாயிருந்தது. நன்றியுரைக்குப் பின்னர், இரவு ஒரு மணிக்குக் கூட்டம் இனிதாகவும் அன்பும் பண்பும் தமிழார்வம் நிறைந்ததாகவும் முடிந்தது. பிற்பகலில் ஏழைகட்குக் கஞ்சிக்கூழ் அளிக்கப் பட்டது:

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்று வடநாட்டில் நம் முதலமைச்சர் கூறி வந்தாரே. அங்கே தமிழ்த் தாயின் வீரம் ஒடுங்கியதை உணரலாம், மறத்தமிழன் சின்னச்சாமி எரிந்து மாண்டாரே "தமிழ் வாழ்க இந்தி ஒழிக" என்று இறுதி மூச்சு வரையில் முழங்கிக்கொண்டே, அவ்வீரனை வணங்காது விட்டு, 'நோயால் செத்தான்' வறுமையால இறந்தான் என்றெல்லாம் தமிழர்களே பொய்கூறித் தூற்றமுற்பட்டார்களே. அங்கே தமிழ்ப் பண்பு மறைந்ததைத் தெரிந்து கொள்ளலாம். இத்தனைக் கேடுகளுக்கும் காரணம் இந்தியே. 'இந்தியைக் கற்காவிட்டால் வாழ முடியாத கொடுமை சூழுமே—" என்று தமிழ்த் தாயின் நன்மக்கள் கலங்குகின்றனரே. அங்கெல்லாம் இந்தியால் தமிழ் சரிந்து வருவதாயும், நாளைக்கு முழுமையாக மறையும் என்பதையும் அறிவீராக.

— தமிழ்ப்பித்தன்

......

நான்காவதாக (மத்திய அல்லது மாநில) அலுவலகங்களில் இந்தியின் உதவியால் காரியங்களைச் செய்வது பற்றி ஆய்வோம். அந்த இடத்தைப் பெற்றிருந்த ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அவ்விடத்தைப் பெற்றுளது. தமிழ் நாட்டினை உள்ளிட்ட நகர, கிராம அலுவலகங்களில், எம்மொழி எவ்விடத்தைப் பெற்றிருந்தாலும், அலுவலகர்கள் தமிழிலேயே வேலைதனைச் செய்யத் தூண்டுவதே முறை அது விடுத்து, ஆங்கிலத்தால் அது நடைபெற்று வந்தது அது ஓரளவு நற்பணியைச் செய்து வந்தது இப்பொழுது அதன் இடத்தையும் இந்தி பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தொடர்புகளும் அதனாலேயே கொள்ளப்படுகின்றன, தமிழில் இவையெல்லாம் நடைபெற்றிருக்குமேயானால் "ஆட்சித் தமிழ்" பற்றிய ஓர் கருத்து நிலவாது, ஒரு சிலரும் "சிறிது சிறிதாகத்தமிழை அலுவலகங்களில் புகுத்துகிறோம்" என்கின்றனர். அம்மொழியினை அவ்வாறு புகுத்த வேண்டுமோ. அதை அவ்வாறு செய்யாது தமிழால் முடியும்" என்று கூறப்படுகின்ற போழ்தும் அதைப் புகுத்துகிறோம் என்பது, ஒவ்வாத செயலே. இக்காரணங்களாலும் ஆட்சி நடாத்துதற்குரிய வாய்ப்பினை அது பறித்தலால் தமிழின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கின்றது. அவ்வூறின் காரணமாகத் தமிழ்தன் உருச்சுருங்கு கெடுதற்கு வாய்ப்பு ஏற்கின்றது.

—ப. உசேன்

(1-5-64 இதழின் தொடர்ச்சி)

அலுவலகங்களில் ஆட்சித்தமிழ்

— க. சகன்னாதன்

இனி, இனித்த முடைய இத்தமிழ், மூடி மன்னர் காலந்தொட்டு இன்றுவரை ஆட்சி மொழியாகத் தொடர்ந்து அரியணையில் வீற்றிருந்திருக்குமானால் அதன் வளர்ச்சி எந்நிலையில் இருந்திருக்கும்? கடந்த இருநூறு ஆண்டுகளாக ஏற்பட்ட மேலைநாட்டு எந்திரப் பொறியியல் வளர்ச்சிக்கேற்ப இந்த நாட்டிலும் பொறியியல் விஞ்ஞான வளர்ச்சி முன்பே ஏற்பட்டிருக்கும் என்பது உறுதி. அத்துடன் விஞ்ஞானம், பொறியியற் கலையறிவின் விரிவிற்கேற்ப நம் தாய்மொழியிலும் புதுப்புதிய கலைச் சொற்கள் அவ்வப்போது தோன்றி இன்று தமிழ்மொழி எல்லாத்துறைகளிலும் செப்பமிக்க, வளர்ந்தோங்கிய ஒரு மொழியாகப் பொலிவு பெற்றிருக்க முடியும். இத்தகு வளர்ச்சி யேதுமின்றி இனிமேற்றான் பல கலைச் சொற்களைப் புதிதாக உருவாக்கித் தமிழை வளப்படுத்த வேண்டும் என்ற அவல நிலை இன்று ஏற்பட்டிருக்காது. இதற்குக் காரணம், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் அரியணையிலிருந்த தமிழை அகற்றிவிட்டு அயல் மொழியாம் ஆங்கிலம் ஆட்சி செய்துவந்தது தான் என்பதும் தெளிவாகிறது.

ஆகவே ஒருமொழி சிதையாமல் இருப்பதற்கும், மேலும் தேவைக்கேற்ப வளர்வதற்கும் அந்தந்த மக்கள் பேசும் தாய்மொழிதான் அந்தந்த நாட்டின் அரியணையில் அமர்ந்து. ஆட்சி மொழியாக முழுக்க முழுக்க ஆட்சியுரிமை பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனமில்லா தொழிந்ததாற்றான் இன்றுவரை தமிழ் வளராமல் தேங்கிக் கிடந்தது. ஆட்சி அலுவலர்களும் அலுவலகங்களில் தமிழை நினைத்தபடி எளிதாகக் கையாள முடியாமல் தவிக்கின்றனர். ஆகவே தாய்மொழி தவிர வேறு எந்தமொழியையும் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்வது தம் தாய் மொழிக்குத் தாமே தாழ்ச்சியும் வீழ்ச்சியும் ஏற்பட வழி வகுத்துக் கொடுப்பதாகும் எனவே அலுவலகங்களில் தமிழைப் பயன்படுத்தும்போது ஏற்படுகின்ற இன்றைய நடைமுறைச் சிரமங்களைக் கண்கூடாக அனுபவிக்கும் ஆட்சி அலுவலர்கள் பிறிதொரு மொழியை ஆட்சிமொழியாக இனியேலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி அவ்வாறு ஏற்றுக்கொண்டால் இதுகாறும் ஆங்கில மொழியின் வரவால் தமிழ் ஆட்சித்துறையில் வளராமல் முடங்கிக் கிடந்தது போன்றே மேலும் தொடர்ந்து முடமாகியே கிடக்கவேண்டிய அவல நிலை நீடித்துக்கொண்டே போகும்.

இதுவரை ஆங்கிலத்தின் குறுக்கீட்டால் தமிழுக்கு ஏற்பட்ட கேடும், தாழ்வும் நீங்கி இனியேனும் தமிழ் மொழி காலத்திற்கேற்ப கலைச் சொற்களை தன்னகத்தே உருவாக்கிக்கொண்டு செழித்து வளர வேண்டுமாயின் தமிழை அலுவலகங்களில் பயன்படுத்துவதில் இன்னும் அதிக விரைவும் ஊக்கமும் அரசாங்கமும் அரசாங்க ஊழியர்களும் காட்டியாக வேண்டும். இன்று காட்டுகின்ற ஊக்கமும் விரைவும் போதாது. தமிழை ஆட்சி மொழியாக்கி அரசாங்கம் அளித்திருக்கும் உரிமையை நல்லமுறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அரசாங்க ஊழியர்களின் தலையாய கடமையாகும்.

அரசாங்க ஊழியர்கள் எனில், கீழ்நிலை எழுத்தர்கள், மேல்நிலை எழுத்தர்கள், மேலாளர்கள், அலுவலர்கள் என வரிசைப்படுத்தப்பெற்ற முறையில் அனைவரையுமே குறிப்பதாகும். தமிழை ஆட்சிமொழியாக வளர்ப்பதில் அனைவருக்குமே பங்குண்டு. தமிழார்வம் கொண்ட ஒரு கீழ்நிலை எழுத்தர் தமிழிலேயே குறிப்புக்கள் எழுத விழைந்த போதிலும் அவருக்கு மேல்நிலையிலுள்ள மேற்பார்வை அலுவலர்கள் தமிழில் ஆர்வம் காட்டாது ஆங்கிலத்திலேயே தொடர்ந்து எழுதுவார்களாயின் முதலில் தமிழில் எழுதத் தொடங்கிய எழுத்தருக்கு ஆர்வம்குன்றிவிடும். 'மேலிருப்பவர்களே ஆங்கிலத்தில் தொடர்ந்து எழுதும்பொழுது நமக்கென்ன' என்று அவர்களும் ஆங்கிலத்திலேயே எழுத முற்பட்டு விடுவார்கள். அதேபோன்று மேல்நிலை அலுவலர்கள் தமிழார்வம் கொண்டவர்களாயிருந்து கீழ்நிலையிலே உள்ளவர்கள் தமிழில் ஊக்கம் காட்டவில்லையெனில் அப்பொழுதும் அலுவல்கள் விரைவில் நடைபெற முடியாமல் போய்விடும். ஆகவே ஆட்சி அலுவலகங்களில் பணியாற்றும் அனைவரிடத்துமே தமிழார்வம் பெருகித் தழைக்கவேண்டும். அப்போதுதான் அலுவலகங்களில் தமிழ் ஆட்சி ஓங்கி வளர ஒரு கூட்டுக்குடும்பமாக இருந்து அலுவலர்கள் செயலாற்றிப் பயன்பெற இயலும். எல்லாவற்றிற்கும் மேலாக அலுவலகத்திற்குப் பொறுப்பாளியாகவுள்ள மேலதிகாரிக்கு இத்துறையில் பொறுப்பு மிக மிக அதிகம். தன் அதிகார எல்லைக்குட்பட்ட அலுவலகங்களில் தமிழாட்சி நடைமுறையில் முன்னேற்றம் ஏற்படுகிறதா என்பதில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தவேண்டும் எந்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்படுகிறது என்பதையும் அடிக்கடி கண்காணிக்க வேண்டும். எந்த அளவுக்குத் தமிழை அதிக அளவில் அலுவலகங்களில் கையாள இயலும் என்பதையும் அந்த அளவிற்கு தம் அலுவலகங்களில் மற்ற அலுவலர்கள் தமிழை கையாளுகின்றார்களா என்பதையும் அடிக்கடி ஆராய்ந்து பார்த்து அவ்வப்போது ஏற்படுகின்ற குறைபாடுகளை நீக்கவும் மேலும் தமிழை முன்னேற்றவும் உயர் அதிகாரிகளே வழிகாட்டியாக இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது தமிழின் வளர்ச்சி அலுவலகங்களின் மேலதிகாரிகள்காட்டுகின்ற அதிக அளவு ஆர்வத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றால் மிகையல்ல.

இவ்வாறு தமிழை அலுவலகங்களில் கையாளும் பொழுது எடுத்த எடுப்பிலேயே சிலர் தூய தமிழிலேயே எழுதிவிடவேண்டும் என்று தமிழின்மீது கொண்ட அதிக ஆர்வத்தின் காரணமாக எழுதத் தொடங்கிவிடுகிறார்கள். இவ்வாறு தூய தமிழிலேயே எழுத முடிந்தால் அது போற்றி ஊக்குவிக்கப்பட வேண்டிய மகிழ்ச்சிகரமான செயலே ஆகும் ஆனால் அவ்வாறு எழுத முடியாதவர்கள் அதற்காக வருந்தவேண்டியதில்லை.

(1-5-64 இதழின் தொடர்ச்சி)

ஆர்க்கிமிடிசு

— தி. சி. கருப்பண்ணன், எம். ஏ.

விலக்கம் உற்ற தண்ணீரின் எடை எவ்வளவோ, அவ்வளவு குறைவு பொருளின் எடையிற் காணும். ஏனெனில் தண்ணீருள் அமிழும் பொருளை தண்ணீர் எப்போதும் மேல் நோக்கித் தள்ளுகிறது. இவ்வாறு கீழே அமிழும் பொருளை மேல் நோக்கித் தள்ளும் தண்ணீரின் ஆற்றல், பொருளால் விலக்கம் உற்ற தண்ணீரின் எடைக்கு ஒப்பாகும். எடுத்துக்காட்டாக. ஓர் இரும்புத்துண்டு 4 கிலோகிராம் எடையுள்ளதாகக் கொள்வோம் இது தண்ணீருள் முழுதும் மூழ்கும்படி தொங்கவிடப்பட்டால் ஏறத்தாழ அரைகிலோகிராம் எடையுள்ள தண்ணீர் விலக்கப்படும். எனவே தண்ணீருக்குள் அதன் எடை 3½ கிலோகிராம்தான்.

மேற்கூறிய அடிப்படையிற்றான் நாம் தண்ணீரில் எளிதாக மிதந்து நீந்துகின்றோம். நாம் நீந்தும்போது நமது உடலால் விலக்கம் உறும் தண்ணீரின் எடை ஏறத்தாழ நமது எடைக்கு ஒப்பாகும். நம் எடைக்கு ஒப்பான ஆற்றல் கொண்டு தண்ணீர் நம்மை மேல் நோக்கித் தள்ளுகிறது. எனவேதான் தண்ணீருள் நமக்கு எடையே இல்லாததுபோல் புலப்படுகின்றது. அதனாற்றான் தண்ணீருக்குமேலே தலையை வைத்து நீந்துவதைவிட, உடல், தலையாவும் தண்ணீருள் ஆழ்ந்த நிலையில் நீந்துவது எளிமையாக இருக்கிறது. தலையும் சேர்ந்து தண்ணீருள் அமிழும்போது விலக்கம் உறும் தண்ணீரின் அளவும் பெரிதாகிறது. அதனால் முன்னைய நிலையைவிடப் பின்னைய நிலையில் தண்ணீரின் மேல் நோக்கித்தள்ளும் ஆற்றலும் பெரிதாகிறது ஒரு மரக்கட்டை அதன் எடை என்னவோ அவ்வெடையுள்ள தண்ணீர் விலக்கம் உற்றதும் மிதத்தல் பெறுகிறது. இவ்வாறே படகும் கப்பலும் மிதக்கின்றன. நீர்மூழ்கிக் கப்பலும் ஆர்க்கிமிடிசின் இத்தத்துவ அடிப்படையிற்றான் இயங்குகிறது. ஆர்க்கிமிடிசு கணிதம் விஞ்ஞானம் இவற்றில் பெரும் புலமை பெற்று விளங்கினார். அவர் கல்லறையும் உருளை உருண்டை (Cylinder, Sphere) வடிவங்கள் பொறிக்கப்பட்டுப் பார்ப்போர்க்குக் கணித அறிவை ஊட்டவல்லதாய் அமைந்துள்ளது

(1-5-64 இதழின் தொடர்ச்சி)

வள்ளுவரும் அரசியலும்

— டாக்டர் பா. நடராசன்,
எம்.ஏ., டி.லிட்., எம்.எல்.ஏ.,

பொருளும் இன்பமும்

2. இங்ஙனம் இன்பத்திற்கு வித்தாகப்பொருளுக்கு முதலிடம்கொடுத்து, அரசியலுக்குத் துணையிடம்வகுத்த முறையால் சில உண்மைகள் பெறப்படுகின்றன. அரசியல் உரிமை என்பதைவிடப் பொருளாதார உரிமையே தனி மனிதயின்பத்திற்கு வேண்டுவது. இதை குடிகட்காகச் சொல்லப்பெறும் ஒழிபியலில் விளக்க முயல்கிறார்.

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்கிறார்.

அரச அமைப்பும் சிறப்பும்.

3. மேலும் இன்பக் குறிக்கோளுக்குத் துணைக்காரணமாயமையும் அரசியல் உரிமை பற்றிப் பேசி என்ன பயன்? அது ஊழான் வருவதன்றோ? அதுபோலவே அரசியல் அமைப்புப் பற்றியும் முடியாட்சி, குடியாட்சி என்றெல்லாம் விரிப்பானேன்? எங்ஙனமாயினும் ஆட்சி நலன் ஒருவனிடம் செறிந்து படுவதே எல்லா அரசியல் அமைப்புக்களுடையவும் இயல்பாக இருக்கிறது. அங்ஙனமாகவே, அமைப்பு எங்ஙனமாயினும், ஆட்சி நல்லாட்சியாக இருத்தல் வேண்டும். உருவமன்று கருத வேண்டுவது; உட்பொருளே சிறப்பாகும்.

அரசும் தெய்வமும் :

4. அரசியலமைப்பின் உருவம் எவ்வாறிருப்பினும் இருக்க; நல்லாட்சி ஒன்றே நாட்டமாயிருத்தல் வேண்டும் என்றதனால் அரசர்கள் கடவுளர்களென்றோ, அவர்கள் பிரதிநிதிகளென்றோ அல்லது அரசுரிமை தெய்வீக உரிமையென்றோ வள்ளுவர் கொண்டாரில்லை. 'உலா பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறையென்றார்' என்று கூறி, அதற்குச் சான்றாகத் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்னும் என்ற திருவாய்மொழிஅடிகளையும் பரிமேலழகர் மேற்கோள் செய்துகொள்கிறார். இது உரையாசிரியர் தமது காலத்து நிலவிய ஒருகோட்பாட்டைவள்ளுவர் திருக்குறளில் வைத்துக் காண்கின்றாரேயன்றி வள்ளுவர்கொண்டதாகக் கருதுவதற்கில்லை. பரிமேலழகர் இங்ஙனம் காண்பது புதுமையன்று, நூலிற் பரக்கக் காணலாம். உரையாசிரியர் எல்லோருமே தத்தம் கல்வி அறிவுக்கேற்றவாறே உரை காண்பதியல்பு. அதில் இழுக்கில்லை. பின்னை,

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

என்ற குறள் அரசுரிமை தெய்வீக உரிமை என்ற கோட்பாட்டை நிறுவுகின்றதா என்ற கேள்வி பிறக்கின்றது.

இங்ஙனம் இறைவனுக்கும் அரசியல் தலைவனுக்கும் இருக்கும் தொழில் ஒற்றுமையையே ஆசிரியர் வள்ளுவர் சுட்டிப்போகின்றார். இவ்வாறு மீண்டும் வள்ளுவர் சொல்லியுள்ளார்.

"தேவரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"

இது வள்ளுவர் கையாளும் ஒருவகை உத்தியே. இறை என்பதற்கு நடுவு நிலைமை என்பது பண்புப் பொருளென்று பரிமேலழகரே

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

என்ற குறளுக்குப் பொருள் கொள்ளுங்கால் விரிக்கின்றார். நடுவு நிலைமை என்ற பண்பு அரசனுக்கு இருப்பதாலே அவன் கடவுளாகக் கருதப்படுவான் என்றே பொருள் கோடல் வேண்டுமல்லாது அரசனுக்குத் தெய்வீக உண்மையை வள்ளுவர் அளித்தாரென்று கொள்ளலாகாது கொடுங்கோலன் அரசனாகான்; ஆறலைக்கும் கள்வனே, கொலைஞனே ஆவான் என்று கூறும் வள்ளுவரோ அவனுக்குத் தெய்வீக உரிமை அளிப்பவர்?

அறமும் ஊழும்:

5. வள்ளுவனார்க்குக் குறிக்கோள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அக்குறிக்கோளை எய்தும் நெறியும், இதில்தான் அர்த்தசாத்திரம் யாத்த சாணக்கியருக்கும் திருக்குறள் வகுத்த வள்ளுவருக்கும் காணப்படும் அடிப்படையான வேற்றுமை, அர்த்த சாத்திரம் எங்கும் அரசன் தான் ஆட்சி நலன் பெறுவதற்கும், பெற்ற திருவை நிலைக்கச்செய்தற்குஅறனிகந்தசெயல்களையும் செய்வதும் அனுமதிக்கப்படுகின்றது; பரிந்து கூறப்படுகின்றது. அரசியல் அறிவுரைகள் அறத்தோடு இயைந்தனவாகவே இருக்கின்றன அறந்தெரியாதவன் ஆட்சிக்கு வருவதுண்டே, அது எவ்வாறு என்றால் அது ஊழ்வயத்தால் நிகழ்வது. அந்த ஊழும் அறத்துக்கு முரணானதன்று முன்னே செய்த இருவினைப் பயனின் துய்க்காது எஞ்சிய பகுதியே ஊழ். எனவே அதுவும் அறத்தின் வழி வந்ததேயாகும். அவ்வாறு அறமறியாதவன் ஆட்சித் தலைவனாக வந்திடினும் பின்னே அவன் அறவழியிலேயே நின்று ஆட்சி செய்தல் வேண்டும். அந்தவழி அறத்திற்குரிய கல்வி, கேள்விபோன்ற தகுதிகளையெல்லாம் தன்னதாக்கிக் கொள்ளல் வேண்டும். இதுவே வள்ளுவர் கருத்தாகும்.

பொய்யாமொழி:

நல்லாட்சியின் உறுப்பு நலன்களை மட்டுமே கூறி அரசியல் அமைப்பின் உருவம்பற்றியோ, உரிமை பற்றியோ கூறாது விடுத்த அளவிலே வள்ளுவர் நூலுக்குக் காலமும் இடமும் கடந்த மதிப்புப் பிறக்கலாயிற்று, எப்பாலராரும், எக்காலத்தவரும் போற்றும்பெருமையுடையதாயிற்று. அடிப்படையான அழியா உண்மைகளைக் கூற வந்தார் வள்ளுவர்.

பொதுமொழி:

வள்ளுவர் கையாளும் உத்தியால் அவர் நூல் அரசற்கே யன்றி அனைத்து மக்களுக்கும் என்றும் எங்கணும் பயன்படுவதாய் அமைந்துள்ளது. மாக்கிவலி, சாணக்கியர் போல்வார் தமது அறிவுரைகளை அரசன் ஒருவனுக்கே எடுத்தோதுவாராயினர். அவை ஏனையமக்களுக்குச் சிறப்பாகப் பயன்படுவதாயில்லை. வள்ளுவரோ அரசற்கும், அமைச்சர்க்கும், ஆயத்தார்க்கும் சொல்வோர்போல் எல்லோருக்குமே வெவ்வேறு நிலையில் பயன்படுவகையில் சொல்லிப்போகின்றமுறை உணர்ந்து இன்புறுவதற்குரியதாக இருக்கின்றது. எல்லோருமே வெவ்வேறளவில், வெவ்வேறு நிலைகளில் ஆள்வோராகவும், ஆளப்படுவோராகவும் இருத்தலாலே வள்ளுவர் அரசியல் கருத்துக்கள் எத்தகைய ஆட்சிமுறையிலும் எல்லோருக்கும் பயன்தரும் பெருமையதாக அமைந்துள்ளது.

அறிவுச் செல்வம்

— கி. ஆ. பெ. விசுவநாதம்

செல்வம் பலவகை. அதில் அறிவு ஒரு வகை எனக் கூறலாம். இதனால் அறிவும் ஒரு செல்வம் என்றாகிறது. இதைவிட "அறிவே செல்வம்" என்பது தான் பொருத்தமானதாக இருக்கும்.

எச்செல்வமும் இல்லாத ஒருவரிடம் அறிவுச் செல்வம் ஒன்றிருந்து விட்டால் அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றவனாவான். எல்லாச் செல்வங்களையும் பெற்ற ஒருவன் அறிவுச் செல்வத்தைப் பெறாதவனாக இருந்தால் அவன் எல்லாச் செல்வங்களையும் இழந்தவனாகிவிடுவான்.

எந்தச் செல்வத்தையும் உண்டு பண்ணும் ஆற்றல் அறிவுச் செல்வத்திற்கு உண்டு. பிற செல்வங்களுக்கு இந்த ஆற்றல் இல்லை. இதனாலேயே வள்ளுவர் "அறிவுடையார் எல்லாம் உடையார்" எனக் கூறினார்.

செல்வங்கள் அனைத்துமோ, சில செல்வங்கள் மட்டுமோ, அல்லது தனித்த ஒரு செல்வமோ அறிவற்ற மக்களிடத்தில் நிலையாது என்பது வள்ளுவர் கருத்து. இதனை "அறிவிலார் என்னுடையரேனும் இலர்" என்பதால் நன்கறியலாம்.

பிற செல்வங்களைப் பெற்றவன் தன்னையும் காப்பாற்றிக் கொண்டு அவற்றையும் காப்பாற்றியாக வேண்டும். ஆனால், அறிவுச் செல்வமானது தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டு தன்னைச் சார்ந்தவனையும் காத்து நிற்கும் ஒரு அருஞ் செல்வமாகும்.

பல செல்வங்கள் காலத்தால் அழியக்கூடியன. சில செல்வங்கள் பகைவரால் அழிக்கக் கூடியன. இன்னும் சில செல்வங்கள் தானே அழிந்து விடக் கூடியன. ஆனால் அறிவுச் செல்வமோ எப்போதும் அழியாததாகும் எவராலும் அழிக்கமுடியாததுமாகும்.

மனம் வேறு, அறிவு வேறு. "மனமே அறிவு" என மயங்குவர் சிலர். மனம் மயங்கும் அறிவு மயங்காது. மனம் கலங்கும் அறிவு கலங்காது. மனம் வாய்க்காலில் ஓடும் நீர். அறிவு அதன் இருகரைகள். மனம் குதிரை அறிவு குதிரையோட்டி. மனம் குதிக்கும். அறிவு அடக்கும். மனம் ஆசைப்படும். அறிவு அதைத் தடுக்கும். மன் நினைவு மனம் நினைப்பது. மனனம் நினைத்துக் கொண்டேயிருப்பது. மனிதன் மனதின் வழிச் செல்பவன் என்றாவான். அவ்வாறு செல்லாமல் அறிவு செலுத்தும் வழியிற் செல்பவரே "அறிஞர்" எனப்படுவர்.

அறிவை அறியாதவர் சிலர். அறிந்தும் அதனை அடையாதவர் சிலர். அடைந்தும் அதனை வளர்க்காதவர் சிலர். வளர்த்தும் பயன் படுத்தாதவரோ பலர். இந்த நால்வகையினரையும் "அறிவிழந்தவர்" என அறிவைப் பெற்றவர் கூறுவர்.

அறிவை இழந்தவர் மானத்தையும் இழப்பர். அவரை "உயிர் இழந்த உடல்" எனக் கூறலாம் கூறிப்பயன்? உயிரிழந்த உடல் அழிந்தொழிந்து போய் விடும். இது அழிந்து ஒழியாமல் அலைந்து திரிந்து கொண்டேயிருக்கும். உயிரிழந்த உடல் காடுகளிற் கிடந்தால் நாய் நரிகளுக்கேனும் உதவும் இது நாட்டின் நடுவிற் கிடந்தாலும் யாருக்கும் எதற்கும் உதவாது. உயிரிழந்த உடலை அதன் உறவினர்கள் கண்டால் அதனை எரித்தோ, புதைத்தோ அழுது வருந்துவர். ஆனால் இதன் உறவினர்களோ எரிக்காமலும், புதைக்காமலும், அழாமலும் பார்த்துக் கொண்டேயிருப்பர். அதிகம் கூறுவானேன்- உயிரிழந்த உடலுக்கு உற்ற நண்பர்கள் இருந்தால் மலர் மாலையிட்டுப் போற்றுவர். ஆனால் இதற்கு உற்ற நண்பர்கள் இருந்தால் வெறுத்து ஒதுக்கி விடுவர். ஆகவே, அறிவிழந்த மக்களை "உயிரிழந்த உடல்" எனக் கூறுவது ஒருபோதும் பொருந்தாது.

அறிவுடையவர்கள் எத்தகைய மக்களையும் நட்பாக்கிக் கொள்வார்கள். அதுமட்டுமல்ல. பெற்ற அந்நட்பை குறைத்துக் கொள்ளாமலும், வளர்த்துக் கொள்ளாமலும் ஒரேமாதிரியாக வாழ்ந்து வருவர். அறிவிழந்த மக்களால் இது ஒரு போதும் இயலாது.

அறிவுடையார் கண்ணாற் காண முடியாததையும் காண்பர். காதால் கேட்க முடியாததையும் கேட்பர். அதுமட்டுமல்ல, பின்னால் என்ன வரும்? என்ன நேரிடும்? என்பதைக் கூட முன் கூட்டியே அறிவர். அறிவுச் செல்வத்தை இழந்தவர்களால் இது இயலாது.

வில் அம்புகளைக் கண்டாலும், வேல் கம்புகளைக் கண்டாலும் அறிவுடையோர் அஞ்சுவதில்லை. எதற்கும் அஞ்சாத இவ்வீரர்கள் பழி பாவங்களுக்குப்பெரிதும் அஞ்சி நடுங்குவர்.

அறிவுடையோர் அதிகமாகப் பேசுவதில்லை. குறைவாகப் பேசினும், எதிரியின் உள்ளத்திற் பதியுமாறு தெளிவாகப் பேசுவர். அது மட்டுமல்ல, எதிரியின் பேச்சுக்களுக்குள் மறைந்து கிடக்கும் உண்மையையும் எளிதில் அறிவர். அவர்கள் ஏமாறுவதில்லை, எவரையும் ஏமாற்றுவதுமில்லை

உயர்ந்தவர்கள் என்று சொல்வதையெல்லாம் நம்புவதையோ, தாழ்ந்தவர்கள் என்று சொல்வதையெல்லாம் மறுப்பதையோ, நண்பர்கள் என்றுசொல்வதையெல்லாம் ஏற்பதையோ, பகைவர்கள் என்று சொல்வதை யெல்லாம் வெறுப்பதையோ அறிவுடையவர்களிடம் காணமுடியாது. இந்நால்வரின்சொற்களிலும் காணப்படுகிற உண்மைகளை மட்டும் ஆராய்ந்து வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அறிவுடையார்க்கு மட்டுமே உண்டு.

கண்ணாற் கண்டவைகளும் கூட அறிவுடையாரிடத்திற் பொய்த்துப் போவதுண்டு: கடலின் ஆழமான விடத்து நீர்நீலநிறமாகத் தோன்றும். குறைந்த ஆழமுள்ள விடத்து நீர் பச்சை நிறமாகத் தோன்றும். அலையிலுள்ள நீர் முத்துப் போன்று வெண்மை நிறமாகத் தோன்றும். இரு கைகளிலும் அள்ளிப்பார்த்தால் நிறமற்று விளங்கும். உண்மை என்னவெனில் நீருக்கு நிறமில்லை என்பதே. இதனால் கண் கண்ட உண்மையைக் கூட அறிவு மறுத்தறிவதைக் காணலாம்.

காதாற் கேட்பவைகளும் கூட அறிவுடையாரிடத்திற் பொய்த்துப் போவதுண்டு. சிவாசி கணேசன் பாட்டு; காதில் விழும். நிழற்படத்திற் கண்டதும் கேட்டதும் கூட நினைவிற்கு வரும். என்றாலும் பாடியது அவரல்ல, வேறொருவர் என்பதும், அதுவும் இப்போது கேட்டது சொந்தக் குரலல்ல, ஒலிப்பதிவு என்பதுவுமே உண்மையாக விருக்கும் இதனால் காதுகேட்டு அறியும் உண்மையைக் கூட அறிவு மறுத்தறிவதைக் காணலாம்.

சாதி வேற்றுமை கூறுபவர் முன் "ஒன்றே குலம்" என்பவரும், சமய வேற்றுமை கூறுபவர் முன் "ஒருவனே தேவன்" என்பவரும், இட வேற்றுமை கூறுபவர் முன் "யாதும் ஊரே" என்பவரும் இன வேற்றுமை கூறுபவர் முன் "யாவரும் கேளிர்" என்பவரும் அறிவுடையோராகக் காட்சியளிப்பர்,

அறிவுடையோர் எதனையும் நன்கு ஆராய்ந்து பிறகே செய்யத் தொடங்குவர். அறிவற்றவர் ஆராயாது செய்யத் தொடங்கிவிட்டுத் துன்புறுவதோடு தமது செயலை எண்ணியும் துன்புறுவர்.

அறிவுடையோர் ஒருவர்க்கு வாக்களிப்பதாயின் நன்கு ஆராய்ந்த பின்னரே வாக்களிப்பர். வாக்களித்து விட்டால் உயிர்போவதானாலும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

(1-5-64 இதழ் தொடர்ச்சி)

மொழித்திற முட்டறுத்தல்

- ந. மு. கோவிந்தராய நாட்டார்

ஒரு மொழி நீண்டகாலம் மாறாத நிலையிலிருப்பதற்கு அதன் எழுத்தமைப்புப் பெரிதும் உதவுகின்றது. தமிழில் 12 உயிர்களும், 18 மெய்களும், 3 சார்பெழுத்துக்களும் உள்ளன. மெய்களில் மெல்லெழுத்தாறும் வல்லெழுத்தாறின் பிறப்பிடங்களிலேயே பிறந்து தலைவளியுடன் மூக்கு வளியாப் புறப்பெற்று வல்லெழுத்துக்களுக்கு நேரிய இன வெழுத்துக்களாய் அமைந்திருத்தலால் ஒரு வகையில் மெய் 12 எனவும் கூறலாம். இவ்வாறு கொள்ளின் 12 உயிர்களுக்கு 12 மெய்கள் அமைந்திருத்தல் மிகவும் பொருத்தமாகும். உடல்மேல் உயிர் வந்தொன்றுவது இயல்பாகும் ஈருயிர் ஓருடம்பில் ஏறுதலும், ஓருயிர் ஈருடம்பில் ஏறுதலும் இயற்கைக்கு முரணும் தமிழ் மொழியின் இவ்வியைத்தகு எழுத்தமைப்பால் மொழி இயற்கையுடன் ஒட்டி நடக்கின்றது. அழியாத நிலையும் எய்துகின்றது உயிரினும் மிக அதிகமான மெய்யெழுத்துக்களுடைய மொழி விரைவில் மாறுபடும். மெல்லெழுத்துக்களையும் சேர்த்துக் கணக்கிடுவோமானால் தமிழில் மெய் உயிரைப்போல் ஒன்றரைப் பங்காகின்றது. இதனை நினைத்தஞ்சியே போலும் தமிழ் இலக்கண நூலார் இன்னின்ன எழுத்துக்களுடன் இன்னின்ன எழுத்துக்கள் மயங்குமென, உயிர், மெய், மயக்க விதி கூறிச் சென்றனர். சமசுகிருதத்திலோ 10 உயிர்களும் 33 மெய்களும் உள்ளன. மெய் உயிரைப்போல் மூன்றேகாற் பங்காகின்றது. ஆங்கில மொழியிலும், வேறு ஐரோப்பிய மொழிகளிலும் 5 உயிர்களும் 21 மெய்களும் உள்ளன. மெய் உயிரைப்போல் 4 பங்காகின்றது. அரபியில் இரண்டே உயிர்களும் 2? மெய்களும் உள்ளன.

இவ்வொப்புமையால் அறியக் கிடக்கும் உண்மை யாதெனில் உயிரினும் மிக அதிக மெய்களை உள்ள மொழிகள் சிறிதுசிறிதாக ஒலிமாறிக்கொண்டே வந்து இறுதியில் வேறு மொழியாகும், பசுபிக் பெருங்கடலின் நடுவினுள்ள பாலினீசிய தீவுகளில் வாழும் மக்களின் மொழிகளில் ஏறக்குறைய உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் ஒரே அளவுடையனவாம். அம்மொழிகள் பன்னூறாண்டுகளாக மாறாத இயல்பையுடையனவாயிருக்கின்றனவாம். தமிழில் மெய் ஒரு சொல்லைத் தொடங்காது. சொல்லிறுதியில் வல்லொற்றாலும் நகர வொற்றும் நில்லா. சொல்லின் நடுவில் அளபெடையிலன்றி இரு மெய்களுக்குமேல் சேர்த்தியங்கா. ஆனால் ஆங்கிலம், சமசுகிருதம் போன்ற மொழிகள் இவ்விதிகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை. மெய்யெழுத்து ஒரு சொல்லைத் தொடங்கும் வெவ்வேறு ஒலியுள்ள மூன்று நான்கு மெய்கள் சேர்ந்தியங்கும். இன்னும் வேறு விகற்பங்களும் உள்ளன, விரித்தல் வேண்டாம். சுருங்கக் கூறில் ஒரு சொல்லில் பல மெய்கள் ஒன்று சேர்ந்து உயிர்களைச் செயல்புரியாதவாறு திணறவைக்கின்றன எனலாம், ஆகையின் சமசுகிருதத்தைப் படிப்போரும் பேச முயல்வோரும் திணறுகின்றனர். மிடற்று வளியும் மூக்கு வளியும் நிறைந்தது அரபிமொழி குரான் பாடல்களை மௌல்விகள் பாடும்போது கேட்போமானால் அவர்கள் திணறுவது நன்றாய்ப் புலனாகும். மூக்குவளி மிகுந்தது. சீனமும் அதன் கிளை மொழிகளும். இதனாலேயே எமது தமிழ் வாழ்த்துப் பாடல்களில் ஒன்றான

> தாழியில் மத்துறு தயிரெனத் தத்தளித் தரற்றுபல்
> மொழிபோலே
> நாசியில் நெஞ்சினில் வலிந்து மிடற்றினில்முக்கி
> வாராதே
> யாழிசையென எழிலிசை தழுவியெழுந் தமிழ்
> அதனாலே
> வாழிய செந்தமிழ் வாழிய செந்தமிழ் என்றுனை
> வழுத்தேனே

என்னும் செய்யுளில் மேற்கூறிய பிற மொழிகளின் இயல்புகளை யாம் விதந்து கூறியது மென்க.

பிழை திருத்தம்.

சென்ற இதழில் சிறந்த மொழிகள் என்றிருப்பதை இறந்த மொழிகள் எனத் திருத்திப்படிக்குமாறு வேண்டுகின்றோம்.

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொடுப்பர். அறிவற்றோர் ஆராயாது வாக்களித்துவிட்டுப் பின்னால் தாமும் செய்யாமல், அவரையும் செய்துகொள்ளவிடாமல் தாமும் துன்புற்று; அவரையும் துன்புறுத்தி வருவர்.

"ஒரு அறிவாளி தன்னை அறிவாளி என நினைப்பது நல்லதல்ல" என்பது ஒரு அறிவாளியின் கருத்து. "அது தவறு" என்பது நமது கருத்து. தன்னை அறிவாளி என நினைத்துக்கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு ஆனால். மற்றவர்களை "அறிவற்றவர்கள்" எனக் கருதுவதுதான் தவறு. ஏனெனில் அறிவுள்ளவர் அறிவு அற்றவர் என எவரையும் பிரிக்க இயலாது ஒவ்வொருவரும் அவரவர் துறையில சிறிது அறிவுடையவராகவே காட்சியளிப்பர். "எல்லாம் அறிந்தவரும், ஏதும் அறியாதவரும் இவ்வுலகமீது இல்லை" என்ற தாயுமானவர் வாக்கும் இதனை மெய்ப்பிக்கும்.

ஒருவரை அறிவு அற்றவர் என்பதைவிட அறிவு குறைந்தவர் என்பதே நியாயமானதாகயிருக்கும், "செல்வம்" என்பதுகூட அப்படியே ஐந்துஆயிரம்ரூபாய்சொத்து உள்ளவன் ஒருவன் 500 ரூபாய் சொத்துள்ளவனுக்கு பணக்காரனே. ஆனால், அவன் 50 ஆயிரம் சொத்துள்ளவனுக்கு ஏழைதானே. அவனும் 5 லட்சம் சொத்துள்ளவனுக்கு ஏழைதானே. இவர்களில் யார் செல்வர்? என்று எப்படிக்கூறுவது? அவ்வாறு அறிவில் செல்வத்தையும், செல்வத்தில் அறிவையும்காணும்பொழுதுதான் அது அறிவுச்செல்வமாகவே திகழ்கிறது

திருக்குறளில் 40ம் அதிகாரத்தில் கல்விச்செல்வத்தை வற்புறுத்திக் கூறிய வள்ளுவர் 42ல் கேள்விச்செல்வத்தை மிக உயர்த்திக் கூறிப் பின்னரே 43ல் அறிவுச் செல்வத்தை விளக்கிக் காட்டுகிறார். இதிலிருந்து அறிவுச் செல்வம் கல்விச் செல்வத்திலும், கேள்விச் செல்வத்திலும் மிகமிக உயர்ந்த செல்வம் என்றாகிறது.

தம்பி! நீ அறிவுடையவனாக இருக்க விரும்புகிறாயா? அப்படியானால் அறிவுச்செல்வத்தைப் பெறு! அது அந்த உயர்ந்தவிடத்தில் இருக்கிறது. இந்த ஒன்பது படிகளிலும் ஏறினால், அதனை எளிதாக அடையலாம்.

1. பெரியோரை வணங்கு
2. எளியோர்க்கு உதவு
3. பொருளைப்போற்று
4. உடலை ஓம்பு
5. நன்றாகப்படி
6. அதிகமாகக் கேள்
7. பொறுமையாகச் சிந்தி
8. குறைவாகப் பேசு
9. ஒழுக்கமாக நட

ஆம். நட! வெற்றி பெறுவாய்! அப்பொழுதுதான் நீயும் அறிவுச் செல்வம் பெற்ற நன்மகனாய்த் திகழ்வாய்! உன்னைப்போன்ற அறிவுச் செல்வங்களை நிறையப் பெற்றால்தான பெற்ற நாடும், வளர்த்த மொழியும் சிறப்படையும்.

வாழட்டும் தமிழகம்!
வளரட்டும் தமிழ்மொழி!

(1—5—64 இதழின் தொடர்ச்சி)

வள்ளுவர் குலவினம்

— பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர், எம். ஏ. பி. ஓ. எல்.

உள்படுதலாவது அணுக்கமாதல் உலக வழக்கு நோக்கின், வள்ளுவரென்பார் வழிவழிக் கணிய(சோதிட)த் தொழில் செய்து வரும் தூய தமிழ்க் குலத்தாராவர். கணியத்திற்கு இன்றியமையாதது சிறந்த கணித அறிவு. கணித அறிவிற்கு இன்றியமையாது வேண்டுவது நுண்மாண் நுழைபுலம் என்னும் கூர்மதி. வள் = கூர்மை வள்ளுவன் = கூர்மதியன்.

பண்டைத் தமிழகத்திற் பொதுமக்களும் புரவலரும் நாளும் வேளையும் பார்த்தே எவ்வினையையும் செய்து வந்தமையின் பட்டத்து யானைமீதேறி அரசன் கட்டளைகளைப் பறையறைந்து நகர மக்கட்கு அறிவித்த அரசியல் விளம்பர அதிகாரியும் வள்ளுவக் குடியைச் சேர்ந்த கணியனாகவே இருந்திருக்கலாம். இனி. வள். வள்பு என்பன தோல்வாரைக் குறிக்கும் சொற்களாதலால், வள்ளினாற் கட்டப்பட்ட முரசத்தை அறைபவன் வள்ளுவன் என்றுங் கொள்ளலாம். "வள்ளுவர் முரசம்" என்பது சிந்தாமணி.

இனி, "வருநிமித்திகன்பேர் சாக்கை வள்ளுவனென்று மாகும்", என மண்டல புருடன் சூடாமணி நிகண்டில் வருவதால், வள்ளுவனுக்கே சாக்கைப் பெயரும் உண்டோ என ஐயம் நிகழ்கின்றது ஆயினும், வேத்தியற் கூத்தனைச் சாக்கை அல்லது சாக்கையன் எனச் சிலப்பதிகாரம் கூறுவதாலும், சூடாமணி நிகண்டு மிகப் பிற்காலத்ததாதலாலும், பிங்கலம் கூறும் 'வள்ளுவன் சாக்கை' என்னும் தொடரை உம்மைத் தொகையாகக் கொள்வதே பொருத்தமென்று தோன்றுகின்றது.

வள்ளுவர் என்பார் ஒரு குடியினராதலாலும், அக்குடியினர் அனைவரும் வேத்தியல் விளம்பர அதிகாரிகளாக வியலாதாதலாலும், திருவள்ளுவர் வள்ளுவர் குடியினராயிருந்து தம் குடிக்குரிய வள்ளுவ (கணிய)த் தொழிலையோ வேறான நெசவுத் தொழிலையோ செய்து வந்த ஓர் அறிஞராகவிருந்திருக்கலாம் இக்கருத்து, மாமூலனார் பெயரால் வழங்கும்,

"அறம்பொருள் இன்பம் வீடென்னுமிந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை அவன்வாய்ச்
சொல்
கொள்ளார் அறிவுடை யார்"

திருவள்ளுவமாலைச் செய்யுளாலும் ஏலேல சிங்கன் கதையாலும் பெறப்படுகின்றன.

இனி, வள்ளுவன் என்பது நாஞ்சில் வள்ளுவன் என்பதுபோல ஓர் இயற் பெயராகவும் இருந்திருக்கலாம். வள்ளுவன் என்று ஓர் இயற்பெயர், இன்றும் நெல்லை மாவட்ட நாட்டுப்புற மக்கள் பெயர் வழக்கில் இருந்து வருகின்றது. மகரம் வகரமாகத் திரிவது இயல்பு. வள்ளுவன் என்பது குடிப் பெயரன்றி இயற்பெயராயின், திருவள்ளுவர் குடியை அறியும் சான்று எதுவுமில்லை என்ற முடிபிற்கே வருதல் வேண்டும். ஆயினும், ஆரியக் கலப்பற்ற தூய தமிழர் என்று கொள்ளுதற்கு ஏதும் தடையில்லை. அவர் ஆரியத் தொடர்புள்ளவராயின்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

எனக் கூறியிரார்.

சிலர், திருவள்ளுவர் வள்ளுவக் குடியினரல்லார் என்பதற்கு, குடிப் பெயர் சிறப்புப் பெயராதலில்லை யெனக் கருவியம் (காரணம்) காட்டுவர். வெண்ணிக்குயத்தியார், இளவேட்டனார் என்று அக்காலத்திலும், ஏ.எல். முதலியார், சி. (G) டி. நாயுடு என்று இக்காலத்திலும், வழக்குண்மையால் அது போலி என்க. சிலர், திருவள்ளுவர் நெய்தல் தொழில் செய்துவந்த பறைக் குலத்தினர் என்பதற்கு,

"பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடும் ஏழை அறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூடத்து."

என்னும் (திருவள்ளுவர் பெயரால் வழங்கும்) தனிப்பாடலையும், தொன்று தொட்டு நெசவுத் தொழில் செய்துவரும் கோலிகப் பறையர் குடியையும், சான்றாகக் காட்டுவர்.

இவ்வாறு, ஆரியக் கலப்பினராகவும் இழிகுலத்தாராகவும் திருவள்ளுவரைக் கூறுவது தமிழர்க்கு இழுக்கெனக் கருதி. சிலர், அவர் வேளாளர் குலத்திற் பிறந்து மார்க்கசகாயர் என்னும் வேளாளப் பெருமகன் மகளாகிய வாசுகியை மணந்தாரென்று கூற முற்படுவர்.

இவையெல்லாம் அகச்சான்றும் நம்பத்தக்க புறச்சான்றும் இல்லாதனவாதலின், இவற்றை யெல்லாம் அறவே விடுத்து,

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்னும் வள்ளுவர் நெறிமுறையைக் கடைப்பிடித்து, அவர் எக்குலத்தார் என்னும் ஆராய்ச்சியில்லாது, அவர் கூறிய வாய்மொழியையே மேற்கொள்வோமாக.

மதுரைத் தனிப்பயிற்சிக் கல்லூரி
Mathurai Tutorial College

தனித்தனிக் கவனிப்பு — தன்னிகரில்லாப் பயிற்சி

XI Std. (S. S. L. C.) அக்டோபர் '64 - P. U. C., M. P. S. C. செப்டம்பர் '64
B. A., B. Sc., B. Com. செப்டம்பர் '64 - Matric செப்டம்பர் '64 – மார்ச் '65

வகுப்புகள் மே 2ஆம் வாரம் தொடங்குகின்றன. Unselected மாணவர்கள் இப்பொழுதே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

விடுதி வசதி உண்டு. ★ அஞ்சல் வழிப் பயிற்சி. ★ ஆய்வுக்கூட வசதியுண்டு-

தகவல்: M. T. C.
G. K. S. Rest House, (Near College House)
Town Hall Road, MADURAI-1.

கு. இளஞ்சேரன், எம். ஏ.
முதல்வர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.